கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் 2001

ரூ.6/-



பரிசு! பரிசு!

ஒவ்வொரு மாதமும் கோகுலம்

தரும் 2 கைக்கடிகாரங்கள்!




இலவசம்!
கோல்டன் ஸ்கூல் கார்டு
250 கிராம் மற்றும் 100 கிராம் சக்ரா கோல்ட் டீயுடன். விரைந்திடுங்கள்!
ரவியின் அம்மா சக்ரா கோல்ட் டீ வாங்கினார்.
அத்துடன் ரவிக்கு ஒரு "மை கோல்டன் ஸ்கூல் கார்டு" இத...
MY SCHOOL TIME TABLE
GOLDEN SCHOOL CARD
ALWAYS
...மற்றும் டைம் டேபிள் கிடைத்தது.
பிறகு ரவி ஒரு பாரத்தை பூர்த்தி செய்து தபாலில் அனுப்பினான்.
CHAKRA GOLD TEA
RS.1000
விரைவில் ஒரு நாள் அவன் ஸ்காலர்ஷிப், ஸ்போர்ட்ஸ் சைக்கிள் அல்லது பர்ஸ்ட் எய்ட் கிட் வெல்லக்கூடும்.
MY IDENTITY CARD
CHAKRA GOLD
GOLDEN TASTE
CHAKRA GOLD BACK2SCHOOL Offer
டாட்டாவின்
சக்ரா கோல்ட் டீ
தங்கமான ருசி
*Offer valid till stock lasts. Conditions apply.





கோகுலம்



மலர் : 19 இதழ் : 7

ஆகஸ்ட் 2001

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்

— பாரதியார்

ஐயோ, அம்மா எங்கே கிடைக்கும்

நல்லபுரத்தில் கந்தசாமி என்ற பண்ணையார் வாழ்ந்து வந்தார். அவருக்கு நிறைய வயல்கள் இருந்தன. எவ்வளவு செல்வம் இருந்தாலும் பிறரை ஏமாற்றிப் பிழைப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார். தனது வயல்களுக்கு வேலைக்கு ஆள் அமர்த்துவார். மற்றவர்களை விட அதிகக் கூலி தருவதாகக் கூறி அழைத்து வருவார். பகல் முழுவதும் கடுமையாக வேலை வாங்குவார். மாலையில் ஐந்து ரூபாய் கொடுத்து 'ஐயோ! அம்மா' வாங்கி வரச் சொல்வார். அவர்கள் கடை முழுவதும் சென்று அலைந்துவிட்டு வெறும் கையுடன் திரும்புவார்கள். "சொன்ன வேலையை ஒழுங்கா செய்யவில்லை. ஆகவே உங்களுக்குச் சம்பளம் கிடையாது" என்று கூறி விரட்டி விடுவார். வேலையாட்கள் அனைவரும் கண்ணீரோடு வீட்டுக்குத் திரும்புவார்கள்.

கந்தசாமியின் இந்தப் பழக்கம் தினந்தோறும் தொடர்ந்தது. அவரைப் பற்றி அறியாத வர்கள் அவரிடம் வேலைக்குச் சென்று ஏமாந்து வந்து கொண்டிருந்தனர்.

அந்த ஊரில் ரங்கன் என்ற புத்திசாலி






இளைஞன் இருந்தான். கந்தசாமிக்குப் பாடம் புகட்ட எண்ணி அவரிடம் வேலைக்குச் சென்றான். வழக்கம் போல "ஏல ரங்கா! பக்கத்துக் கடையில ஐயோ! அம்மா! வாங்கிட்டு வா" என்று ஐந்து ரூபாயைக் கொடுத்தார். "என்ன எஜமான்! நீங்க இன்னும் அந்தக் காலத்துலேயே இருக்கீங்க. இப்ப ஐயோ அம்மா விலை ரொம்ப ஏறிப் போச்சு. அதனால் ஐம்பது ரூபாய் கொடுங்க" என்றான். இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காத கந்தசாமி வேறு வழியில்லாமல் ஐம்பது ரூபாயை ரங்கனிடம் கொடுத்தார். அவன் எப்படியும் தோற்றுப் போய்விடுவான் என்று உள்ளூர நினைத்துக்கொண்டார்.

ரங்கன் கடைக்குச் சென்று ஒரு மண் பானை வாங்கி அதனுள் சில விஷத் தேள்களைப் பிடித்துப் போட்டுக்கொண்டு வந்தான். "எஜமான் நீங்க கேட்டபடி 'ஐயோ அம்மா' வாங்கிட்டு வந்துட்டேன்; இதுக்குள்ள இருக்கு" என்று மண் பானையைக் கொடுத்தான். கந்தசாமி உள்ளே கையை விட்டார். உடனே அங்கிருந்த தேள் அவரைக் கொட்டியது. 'அய்யோ' என்று அலறினார். "எஜமான் நல்லா கையை விடுங்க, அம்மா உள்ளதான் இருக்கும்" என்றான் ரங்கன். மீண்டும் கையை விட தேள் கடித்து 'அம்மா' என்று அலறினார். "சரி... சரி... நீங்க சொன்னபடி 'ஐயோ அம்மா' வாங்கிட்டு வந்துட்டேன். பேசிய சம்பளத்தைக் கொடுங்க" என்று வாங்கிச் சென்றான்.


இரவு முழுவதும் வலியால் துடித்த கந்தசாமி இனி யாரையும் ஏமாற்றுவதில்லை என்று முடிவு செய்தார்.

— பெ. நடராசன்,
எட்டாம் வகுப்பு,
சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி,
மேலச்சீத்தை,
இராமநாதபுரம்.


யாருக்கு உதவலாம்?
கதை : ஆர்.சாரதா, சென்னை.
படம் : மகேஸ்
மன்னர் சாதாரண உடையில் காட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார். திடீரென மழை பெய்தது.
மன்னர் அருகிலிருந்த ஒரு குடிசைக்குச் சென்றார்.
வாங்க ஐயா!
நான் இன்று இரவு மட்டும் தங்கிக்கலாமா? உன் பெயர்?
முனியன். நீங்க தங்கலாம். பழைய ரொட்டியும் கொஞ்சம் பாலும் இருக்கு. சாப்பிடறீங்களா?
நல்ல பசி. கொடு.
மறுநாள்...
முனியா, என்னைத் தெரியவில்லையா?
யார் நீங்கள்?
நான்தான் உங்கள் அரசன்.
அரசே! என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குப் பழைய ரொட்டியைத் தந்துவிட்டேன்.
பரவாயில்லை. உன் நல்ல குணத்துக்கு அந்தக் கருவேல மரங்கள் நிறைந்த இடத்தை எடுத்துக்கொள்.
எதுக்கு மன்னா?
அந்த மரங்களை வெட்டிப் பிழைத்துக் கொள். நல்ல வருமானம் கிடைக்கும்.
நன்றி மன்னா!



நாட்கள் சென்றன. ஒரு நாள் மன்னர் காட்டை நோக்கிச் சென்றார்.
முனியன் இப்போது வசதியாக வாழ்வான் அவனைச் சந்திக்க வேண்டும்.
என்னது! முனியனின் வீடு பழைய குடிசையாகவே இருக்குது! விசாரிக்கலாம்.
மன்னர் கதவைத் தட்டினார்.
வாருங்கள் மன்னா. பழைய ரொட்டியும் பாலும் சாப்பிட நீங்களா?
அது இருக்கட்டும். உனக்குத்தான் கருவேலங்காட்டைத் தந்தேனே. விறகு வெட்டி வசதியா வாழலாமே!
தாங்கள் சொன்னபடி விறகு வெட்டிப் பிழைத்தேன். ஒரு நாள் என் நண்பன் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டுவதை விட கருவேலங் காட்டை எரித்து, கரியாக விற்றால் காசு அதிகம் கிடைக்கும் என்றான்.
அதனால்?
காட்டை எரித்துக் கரியை விற்றேன். விரைவில் பணம் செலவாகிவிட்டது. இப்போது மீண்டும் பழைய நிலைக்கே வந்து விட்டேன்.
அட மடையா!
அதிர்ஷ்டம் அடித்தாலும் அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.
மன்னா எனக்கு உதவி...
சுயமாகச் சிந்தித்து முன்னேறத் தெரியாத உனக்கு மேலும் உதவுவதில் பயனில்லை. வருகிறேன்.



புதிய கண்டுபிடிப்புகள்

தொலைபேசியைக் கிரஹாம்பெல் கண்டுபிடித்தபோது அது ஏதோ ஒரு வேடிக்கை என்று நினைத்தனர். வெஸ்டர்ன் யூனியன் — என்கிற கம்பெனி "புத்திசாலி மனிதன் இந்த விசித்திரமான முறையினால் தொடர்பு கொள்ள மாட்டான். இதில் முதலீடு செய்வது கூடாது!" — என்று கூறி, கிரஹாம் பெல் திட்டத்தைப் புறக்கணித்தது.

பிரிட்டிஷ் அரசாங்கம் 'நம்முடைய அமெரிக்கச் சகோதரர்களுக்கு வேண்டுமானால் ஆள் பஞ்சம் காரணமாக டெலிபோன் தேவைப்படலாம். நமக்குத்தான் செய்திகளைத் தெரிவிப்பதற்கு ஏராளமான சிப்பந்திகள் இருக்கிறார்களே!' என்று கூறியது.

மார்கோனி வானொலியைக் கண்டுபிடித்தபோது லண்டன் பத்திரிகையொன்றில் ஒருவர் "கம்பியில்லாமல் அமெரிக்காவிற்குச் செய்தி அனுப்பி மார்கோனி வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் கம்பி மூலம் செய்தி அனுப்புவதுதான் கம்பியில்லாத் தந்தியை விடச் சீக்கிரம் போய்ச் சேரும்" என்று கருத்து தெரிவித்தார்.

டெலிவிஷனைக் கண்டுபிடித்தவர் ஜான் பெய்ட். அவர் 1925— ஆம் ஆண்டு லண்டனிலிருந்து வெளியாகும் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' ஏட்டின் ஆசிரியரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அந்த ஆசிரியர் ஒரு நிருபரை அழைத்துக் கூறினார்: "உடனே கீழே சென்று ரிசப்ஷனில் இருக்கும் அந்த ஆசாமியை அனுப்பி விடுங்கள். அவன் ஒரு பைத்தியக்காரன். கம்பித் தொடர்பின்றியே உருவத்தைக் காட்டும் மிஷின் ஒன்றை வைத்திருப்பதாக அவன் சொல்கிறான். அவன் கையிலே கத்திகூட இருக்கலாம். ஜாக்கிரதை! அவனை விரட்டுங்கள்!"

ஜேம்ஸ் வாட் நீராவி எஞ்சினைக் கண்டுபிடித்தபோது லண்டனில் உள்ள யுனிவர்சிட்டி காலேஜ் பேராசிரியரான டாக்டர் லார்டனர் கூறினார்: "நீராவி எஞ்சினால் இயக்கப்படும் ரயிலில் பிரயாணம் செய்வது, முடியாத காரியம். அந்த ரயில் வேகமாகச் சென்றால் பிரயாணிகள் மூச்சுவிட முடியாமல் திணறிப் போய் செத்து விடுவார்கள்."

பிறந்தபோது...

ரைட் சகோதரர்கள் முதன்முதலாக 1903–இல் தாங்களே உருவாக்கிய விமானத்தில் பறப்பதற்கு ஏழு தினங்களுக்கு முன் 'தி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை ஒரு தலையங்கம் தீட்டியது. அதில், 'நேரமும், பணமும் இந்த ஆகாய விமானப் பரிசோதனையில் பாழடிக்கப்படுகின்றன' என்று காரசாரமாகத் திட்டியிருந்தது.

பிரபல விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன், எரிந்து சாம்பலாகாத இழைகளைக் கொண்ட பல்பை உருவாக்குவதற்கு அரும்பாடு பட்டார். இரவு — பகல் கண் விழித்து அந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார். அவர் சோதனையில் வெற்றி பெற்றபோது அதிகாலை மூன்று மணி. பல்பு பிரகாசமாக எரிந்தது. சற்றுத் தொலைவில் தூங்கிக் கொண்டிருந்த மனைவியை எழுப்பி, "பார், நான் கண்டுபிடித்த பல்பு எவ்வளவு பிரகாசமாக எரிகிறது!" என்றார். தூக்கக் கலக்கத்தில் இருந்த அவரின் மனைவி "வெளிச்சம் கண்களைக் கூசுகிறது. தூக்கம் கெட்டுப் போகின்றது. உடனே விளக்கை அணைத்துவிட்டுப் படுங்கள்" என்றார்.

1940களில் கம்ப்யூட்டர்கள் வந்தபோது அதற்கு மார்க்கெட் இருக்காது என்று நினைத்தார்கள். 1948 ஆம் ஆண்டு ஒரு மதிப்பீடு செய்யப்பட்டது. அமெரிக்கா முழுவதற்கும் பன்னிரண்டு கம்ப்யூட்டர்கள்தான் தேவைப்படும் என்று அந்த சர்வே கூறியது. இன்று அமெரிக்காவில் வீட்டுக்கு வீடு கம்ப்யூட்டர் இருக்கிறது.

வாக்குவம் பிளாஸ்க்கை முதலில் கண்டுபிடித்தவர் சர் வில்லியம் டிவர். ஆனால் அவருடைய மாமியாருக்கு இந்த ஃபிளாஸ்க் உண்மையில் சூட்டைக் காத்து நிற்குமா என்று சந்தேகம். எனவே, அந்த ஃபிளாஸ்க்கைச் சுற்றி மூடுவதற்காகக் கம்பளியில் ஒரு சிறு வலை பின்னினாராம்!

1957இல் ரஷ்யர்கள் விண்வெளியில் 'ஸ்புட்னிக்'கைப் பறக்க விட்டனர். பிரிட்டிஷ் விஞ்ஞானியான சர் ரிச்சர்ட் ஊலி "விண்வெளிப் பயணம் என்பது வெறும் பிதற்றல்" என்றார். அதற்குச் சரியாக பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிகக விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கி நடந்தனர்.

— ஜரினா பானு



மாறியது நெஞ்சம்...

ஆர். திவ்யா

காட்சி - 1

(படுக்கையில் படுத்து இருக்கிறான் குணா. அம்மா வருகிறார்.)

அம்மா: டேய்! குணா... மணி எட்டாயிடுச்சு. இன்னுமா தூக்கம்? எழுந்திருடா...

குணா: அம்மா! இன்னும் ஒரு பத்து நிமிஷம் கழிச்சு எழுந்திருக்கிறேன்.

அம்மா: டேய் ராத்திரி ஒன்பது மணி வரை விளையாடிட்டு வர்ரே. பாடம் படிக்கிறதும் இல்லை, இப்படி இருந்தா நீ உருப்பட்டா போலத்தான் எழுந்திருடா.

(குணா எரிச்சலுடன் எழுந்து போகிறான்)

காட்சி 2

(குணா சீருடை அணிந்து, முதுகில் புத்தகப் பையுடன் நிற்கிறான்.)

குணா: அம்மா...

அம்மா: என்னடா?

குணா: அப்பா நைட் டூட்டி முடிஞ்சு எப்பம்மா வருவார்?

அம்மா: ஏண்டா கேக்கறே?

குணா: அம்மா நான் நாலு வருஷமா இதே ஸ்கூல் பேக், பென்சில் பாக்ஸ் எல்லாம் கொண்டு போறேன். என் ஃப்ரண்ட்ஸ் கேலி பண்றாங்கம்மா, அவங்க எல்லாம் புதுசு புதுசா கொண்டு வர்றாங்க. எனக்கும் புதுசா வாங்கித் தரச் சொல்லும்மா.

அம்மா: முதல்ல நீ ஒழுங்காபடி. எல்லாம் தன்னால வரும்...

குணா: படி படி படி... இதைத் தவிர வேற ஒண்ணும் சொல்ல மாட்டே...

(முணுமுணுத்தபடி செல்கிறான்)

காட்சி – 3

(வகுப்பறை)

மாணவர்கள்: குட்மார்னிங் சார்




ஆசிரியர்: குட்மார்னிங் எல்லோரும் உட்காருங்க. இன்னிக்கு அரிச்சந்திரன் கதை சொல்லப் போறேன். அதுக்கு

மாற்றியவர் யாரோ...

முன்னே உங்கள் வருகையைப் பதிவு செய்து கொள்ளலாம்.

(ஆசிரியர் அவரது சட்டைப் பையில் கை வைக்க பேனா கொண்டு வரவில்லை என்பதனை உணர்ந் தார்)



ஆசிரியர்: யாராவது பேனா....

(ஆசிரியர் பேச்சை முடிக்கும் முன்னர் தீபக் ஓடிச் சென்று பேனாவைக் கொடுக்கிறான்)

ஆசிரியர்: தீபக்... இந்தப் பேனா அழகா இருக்கே... எங்கே வாங்கினே?

தீபக்: சார் இது எங்கப்பா சிங்கப் பூரிலிருந்து வாங்கிட்டு வந்தது. விலை 250 ரூபாய்.

ஆசிரியர்: தீபக் இந்த மாதிரி விலை உயர்ந்த பொருட்களைப் பள்ளிக்குக் கொண்டு வரக் கூடாது சரியா?

தீபக்: சரிங்க சார்...

ஆசிரியர்: சரி... எல்லோரும் வந் திருக்கீங்களா?

தீபக்: சார் ராஜா மட்டும் வரலை சார்.

ஆசிரியர்: சரி... இப்போ பாடம் ஆரம்பிக்கலாம்... அரிச்சந்திரன் என் பவர்....

(அப்போது பியூன் ஒரு மாண வனை அழைத்துக்கொண்டு உள்ளே வருகிறார்)

பியூன்: மன்னிக்கவும். இந்த மாண வன் சென்னையிலிருந்து வந்துள் ளான். இனி உங்கள் வகுப்பில் இருப்பான்.

ஆசிரியர்: உன் பெயர் என்னப்பா?

புது மாணவன்: அரிச்சந்திரன் சார்.

ஆசிரியர் (சிரித்தபடி): இன் னிக்கு உன் பாடம்தான் எடுத்துக் கிட்டு இருந்தேன். போய் உட்கார்.

காட்சி 4

(குணா, வீட்டில் அந்தச் சிங்கப் பூர் பேனாவால் எழுதிக் கொண்

அழ. வள்ளியப்பா நினைவு நாடகப் போட்டியில் முதல் பரிசு பெறும் நாடகம்

டிருக்க குணாவின் அம்மா வருகிறார்.)

அம்மா: என்னடா குணா அதிசயமா இருக்கு. விளையாடப் போகாமல் படிச்சிட்டு இருக்கே? ஏதுடா இந்தப் புது பேனா?

குணா: அம்மா... இது வந்து... வந்து... என் ஃபிரெண்ட் எழுதக் கொடுத்தான்மா... திருப்பிக் கொடுக்க மறந்துட்டேன்...

அம்மா: நாளைக்கு மறக்காம கொடுத்திடு... என்ன?

குணா: சரிம்மா.

காட்சி – 5

(வகுப்பறை)

ஆசிரியர்: எல்லோரும் உட்காருங்க.

(எல்லோரும் அமர ராஜா என்ற மாணவன் மட்டும் நிற்கிறான்)

ஆசிரியர்: ஏண்டா நின்னுட்டு இருக்கே? உட்கார்...

ராஜா: சார்... என் ஸ்கெட்ச் பாக்ஸ் காணோம் சார்...

மதன்: சார்... என் புது நோட்டையும் காணோம் சார்.

ஆசிரியர்: என்னடா இது? போன வாரம் தீபக்கோட சிங்கப்பூர் பேனா தொலைந்தது. வாராவாரம் ஒவ்வொருத்தரும் எதையோ காணோம்னு சொல்லிக்கிட்டே இருக்கீங்க.

ராஜா: சார், நான் கேம்ஸ் கிளாஸ் போகறதுக்கு முன்னாடி கூட ஸ்கெட்ச் பாக்ஸ் பார்த்தேன்.

ஆசிரியர்: இதுமாதிரி இதுக்கு முன்னாடி நடக்கவே இல்லையே! இப்போ அடிக்கடி காணோம்னு சொல்றீங்க... டேய் அரிச்சந்திரன், உண்மையைச் சொல்லு. நீயாடா, எடுக்கறே?

அரிச்சந்திரன்: சார், நான் எடுக்கலை சார்.

ஆசிரியர்: ஏண்டா அரிச்சந்திரன்னு பேர் வச்சுட்டுப் பொய் சொல்றே?

அரிச்சந்திரன்: (அழுகிறான்) சார்... நான் எடுக்கலை சார்...

ஆசிரியர்: சரி... சரி அழாதே... தீபக் இந்த வகுப்பு முடிஞ்ச பின்னாடி என்னை வந்து பாரு.

காட்சி - 6

(ஆசிரியரின் அறை. தீபக் வருகிறான்.)

தீபக்: சார், வரச் சொன்னீங்களே!

ஆசிரியர்: தீபக், உன்னோட பேனா எந்தக் கிழமை தொலைஞ்சது?

தீபக்: சார் இரண்டாம் தேதி புதன் கிழமை சார்.

ஆசிரியர்: உங்க பொருட்கள் எல்லாம் புதன்கிழமை அதுவும் கேம்ஸ் கிளாஸ் முடிஞ்சு வந்து பார்த்தா காணோம் இல்லையா?

தீபக்: ஆமாங்க சார்.

ஆசிரியர்: பாரு... ராஜா, மதன் இவங்களோடதும் இன்னிக்குப் புதன்கிழமை கேம்ஸ் கிளாஸ் முடிஞ்சு பார்க்கும்போது காணோம்.

தீபக்: அட... ஆமாங்க சார்...

ஆசிரியர்: தீபக்... நான் உங்கிட்ட ஒரு அழகான கடிகாரம் தரேன். அடுத்த புதன்கிழமை நீ அதை எல்லோருக்கும் காட்டு. உங்க அப்பா சிங்கப்பூரிலிருந்து வாங்கிட்டு வந்ததா சொல்லிடு. உன் பைல வச்சுட்டு கேம்ஸ் கிளாஸ் போ. யார்கிட்டேயும் நான் சொன்னதைச் சொல்லாதே. அப்பத்தான் திருடனைப் பிடிக்க முடியும்.



"டாக்டர்! நீங்க பல்லைப் பிடுங்கும் போது வலிக்குமே."

"பல்லைக் கடிச்சிக்கிட்டு பொறுத்துக் கோங்க!"

– எம். வினோத்

தீபக்: சரிங்க சார்.

காட்சி – 7

(அடுத்த புதன்கிழமை கேம்ஸ் கிளாஸ். மாணவர்கள் எல்லோரும் சென்றுவிட குணா கடிகாரத்தை எடுக்கிறான்.)

ஆசிரியர்: டேய்... திருட்டு ராஸ்கல்...

குணா: சார்... சார்... அடிக்காதீங்க சார்... என்னை மன்னிச்சிடுங்க சார்...

ஆசிரியர்: ஏண்டா திருடினே?

குணா: சார்... எங்க வீட்ல ரொம்பக் கஷ்டம் சார். எனக்கு எதுவுமே வாங்கித் தர மாட்டாங்க சார். நான் எப்பவும் பழைய கிழிஞ்ச பை, உடைஞ்ச பென்சில் பாக்ஸ் இதுதான் கொண்டு வருவேன். என் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் கேலி பண்ணறாங்க. இவங்க மட்டும் புதுசு புதுசா கொண்டு வரும்போது ரொம்ப பொறாமையா இருந்தது சார்... முதன் முதலா தீபக் பேனா மேல ஆசைப்பட்டு அதை எடுத்திட்டேன் சார்... யாருமே என்னைக் கண்டுபிடிக்காததால தொடர்ந்து நான் திருடிக்கிட்டு இருந்துட்டேன். சார் தயவு செய்து என்னைக் காட்டிக் கொடுத்திடாதீங்க. வீட்ல தெரிஞ்சா அவ்வளவுதான்! இனிமேல் நான் யார் பொருட்களையும் எடுக்க மாட்டேன் சார்.

ஆசிரியர்: டேய் குணா... பொருளைப் பறி கொடுத்தவங்க மனசு என்ன பாடு பட்டிருக்கும். அந்தப் பையன் அரிச்சந்திரனை நான் வீணா சந்தேகப் படும்படி செய்திட்டியே! அவனுக்கு எப்படி இருந்திருக்கும்? நீ கொண்டு போன பொருளை எல்லாம் அவரவர்களுக்குச் சேர்த்துடணும். நாளைக்கு எங்கிட்ட கொண்டு வந்து குடு. இனிமேல் ஒழுங்கா நடந்துக்கோ...

குணா: சரிங்க சார்.

காட்சி - 8

(மறுநாள் வகுப்பறை)

மாணவர்கள்: குட்மார்னிங் சார்.

ஆசிரியர்: குட்மார்னிங் எல்லோரும் உட்காருங்க.



"அந்தப் பையன் ஏன் திரும்பித் திரும்பி பார்த்துக்கிட்டே நடக்கிறான்?"

"கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கணும்னு ஆசிரியர் சொன்னாராம்!"

– எம். வினோத்

ஆசிரியர்: தீபக் இங்கே வா... இந்தா உன் சிங்கப்பூர் பேனா... ராஜா, மதன் ஒவ்வொருத்தரா வந்து வாங்கிட்டுப் போங்க.

தீபக்: யார் சார் திருடன்?

ஆசிரியர்: நம்ம வகுப்புல ஒருத்தன்தான் திருடிகிட்டு இருந்தது. ஆனால் கண்டிப்பா அது அரிச்சந்திரன் கிடையாது. அவன் வந்ததிலிருந்து காணாமல் போனதாலே நாம எல்லாம் அரிச்சந்திரனைத் தப்பா நினைச்சுட்டோம். இனிமேல் நம்ம வகுப்புல திருட்டே நடக்காது. அந்தத் திருட்டு மாணவன் திருந்திட்டான். அவன் யாருன்னு சொல்ல மாட்டேன். நீங்களும் இனிமேல் இது பத்தி பேசிட்டு இருக்கக் கூடாது. அவனை நான் மன்னித்து விட்டேன். திருடன்னு முத்திரை குத்தி அவனை நிரந்தரத் திருடனா மாத்த நினைக்கலை. அவன் நல்லா படிச்சு சிறந்த மாணவன் எனப் பெயர் எடுக்கட்டும்.

(அனைத்து மாணவர்களும் கை தட்டித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.)



எஸ்.சுஜாதா





மழைக் காலத்தில் வீட்டின் வாசலில், தோட்டத்தில் பட்டுப்பூச்சி, மரவட்டை போன்ற உயிரினங்களுடன் முதுகில் கூட்டைச் சுமந்து கொண்டு செல்லும் நத்தையையும் பார்த்திருப்பீர்கள். சின்னஞ் சிறு நத்தை மெதுவாக நகர்ந்து செல்வதைப் பார்க்க அழகாக இருக்கும்.

நத்தை மெல்லுடலி தொகுதியிலே வயிற்றுக்காலி வகுப்பைச் சேர்ந்த பிராணி. இவற்றில் பெரும்பாலானவற்றிற்குச் சுண்ணாம்புப் பொருளாலான (சங்கு, ஓடு, கிளிஞ்சல்) கூடு உண்டு. இவ்விதம் கூடுள்ள நத்தைகளில் சுமார் 40,000 இனங்கள் உள்ளன.

நிலத்திலும் கடலிலும் நத்தைகள் வாழ்கின்றன. இவை உலகெங்கும் காணப்படுகின்றன.

நத்தையின் உடல் மிகவும் மென்மையானது. உடலின் மேல் உள்ள ஓடு

கைட்டின் என்ற சுண்ணாம்புப் பொருளால் ஆனது. கூடு பல சுருள்களாக அமைந்திருக்கும். கூட்டைச் சுமந்து செல்லும் நத்தையை நாம் தொட்டாலோ அல்லது வேறு ஏதாவது ஆபத்து ஏற்பட்டாலோ உடனே தன் உடலைக் கூட்டுக்குள் இழுத்துக் கொள்ளும். சில நத்தைகளுக்கு ஓடு கிண்ணம் போன்றும், சிலவற்றிற்கு நீண்ட குழாய் வடிவிலும், மேலும் சிலவற்றிற்கு தகடு போன்ற வடிவிலும் அமைந்துள்ளன. நத்தையின் கூட்டை உற்றுப் பார்த்தால் உள்ளிருக்கும் இதயம், இரத்த நாளங்கள் முதலியன ஓட்டின் வழியே தெரியும்.


சில நத்தைகள் தங்களைச் சுருக்கிக் கொண்டு கூட்டின் வாயிலை உடலிலிருந்து சுரக்கும் கோழையின் மூலம் அடைத்து விடுகின்றன. இப்படி வாயிலை அடைத்த நிலையில் வறண்ட வேனில் காலத்தை உறங்கிக் கழிக்கின்றன. இவ்வாறு உறங்கும் நிலையில் உள்ள நத்தைகளை மரப் பொந்துகள், மரப் பட்டை மற்றும் இலையின் அடிப்புறத்திலும் பார்த்திருக்கலாம். சில நத்தைகள் கூட்டாகச் சேர்ந்து தரையில் உள்ள பள்ளங்களில் உறங்குகின்றன.



நத்தைகள்



தரையில் வாழும் நத்தைகள் மிகச் சிறியவை. கடலில் வாழும் நத்தைகள் மிகப் பெரியவை.



இவற்றுள் சில 30 செ.மீ. நீளம் கூட இருக்கும்.

இவற்றின் தலையில் நான்கு உணர் கொம்புகள் உள்ளன. இரண்டு உணர் கொம்புகள் நீளமாகவும், இரண்டு உணர் கொம்புகள் குட்டையாகவும் இருக்கும். நீண்ட கொம்புகளின் நுனியில் கறுப்

சில நத்தைகள் கூட்டாகச் சேர்ந்து தரையில் உள்ள பள்ளங்களில் உறங்குகின்றன.

பாக இரு புள்ளிகள் காணப்படும். இவையே கண்கள். இக்கண் மூலம் நத்தைக்குச் சரியாகப் பார்வை கிடைக்கும் என்று சொல்ல முடியாது. இந்த உணர் கொம்புகளும் நீட்டி, சுருக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளன. இவை வாசனை மூலம் பொருட்களை உணர்ந்து கொள்கின்றன.

உடலின் அடிப்பாகத்தில் தடிப்பான தசை உண்டு. இதுவே நத்தையின் கால். இதில் அலை அலையாகச் சுருக்கங்கள் இருக்கும். இச்சுருக்கங்களால் நத்தை முன்னே நகர்ந்து செல்கிறது. அப்போது வழவழப்பான திரவத்தைச் சுரக்கும். எளிதாக நகர்ந்து செல்ல இத்திரவம் உதவுகிறது.


“நேத்து உங்களைக் காணோமே... எங்கே போயிருந்தீங்க?”

“பையனுக்கு மொட்டையடிக்கப் போயிருந்தேன்.”

“எங்கே மொட்டையடிச்சீங்க?”

“தலையிலேதான்!”

- தஞ்சை தாமு



நத்தையின் நாக்கு நீளமாக இருக்கும். இதில் மிகச் சிறியதாக ஏராளமான பற்கள் இருக்கும். வெளிநாட்டில் வாழும் ஒரு வகை நத்தைக்கு 14,000 பற்கள் கணக்கிட்டு இருக்கிறார்கள். நத்தை தாவரப் பொருட்களை மட்டுமே உண்ணும். நாக்கின் மூலம் இலைகள், அரும்புகள், பூ, இளந்தண்டு முதலியவற்றைத் துருவித் தின்னும். நத்தை தளிர்களைத் தின்று விடுவதால் செடியின் வளர்ச்சி தடைப் படுகிறது. ஆகவே இதை விவசாயிகளின் பகைவன் என்று சொல்வார்கள்.

நீரிலும் நிலத்திலும் வாழும் நத்தைகளில் பல பாலூட்டிகளைப் போல காற்றைச் சுவாசிக்கின்றன. இவை பல்மனேட்டா அல்லது நுரையீரல் நத்தைகள் என அழைக்கப்படுகின்றன. நத்தைக் கூட்டின் வாய்க்கு அருகில் ஒரு பக்கத்தில் ஒரு சிறு துவாரம் அவ்வப்போது திறந்து மூடும். இதுவே மூச்சுத் துளை. இதன் வழியாகக் காற்று மூச்சறைக்குள் போகவும் வெளிவரவும் செய்யும். நீருக்குள் மூச்சு விடும் நத்தைகளின் செவுள் போன்ற மடிப்புகள் சுவாசிக்க உதவுகின்றன.

முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கக் கூடியவை பெரும்பாலான நத்தைகள். முட்டைக்குள்ளேயே குஞ்சு முதிர்ச்சியடைந்து சிறு நத்தை வடிவத்திலேயே முட்டையிலிருந்து வெளிவரும். நீரில் வாழும் சில நத்தைகள் லார்வாக்களை உண்டாக்குகின்றன. அவை சீலியம் என்னும் முடிகளின் உதவியால் நீந்தி, வாழ்ந்து நத்தையாக உருமாற்றமடைகின்றன.

நத்தை வளர வளர அதன் ஓடும் வளர்ந்து கொண்டே போகும். மெல்லிய உடலைப் பாதுகாப்பதற்கு இயற்கை அளித்த கொடையே இந்த ஓடு.

கடினமான ஓட்டைப் பாதுகாப்பாகப் பெற்றிருந்தாலும் நத்தைகளைப் பறவைகள், பிராணிகள் மட்டுமின்றி மனிதர்களும் உணவாக்கிக் கொள்கின்றனர்.

ஹா, ஹா, ஹா!



"ஏண்டா சோமு அழற?"

"50 காசு கொடுத்தாத்தான் சொல்வேன்"

"சரி, இந்தா 50 காசு. இப்பச் சொல்லு."

"50 காசு வேணும்னுதான் அழுதேன்!"

- பரணிதரன், திருப்பதி.



"ஏங்க ஒரு பத்து ரூபாய் கொடுங்க."

"எங்கிட்ட சுத்தமா பணமே இல்லைங்க."

"அழுக்கா இருந்தால் பரவாயில்லை, கொடுங்க."

- பி.பார்த்திபன், சென்னை.

"உங்க தாத்தா தினமும் குதிரை வண்டியிலதான் போவாரா? எங்கே போவார்?"

"வாடகைக்கு ஏறுறவங்க எங்கே போகணும்னு சொல்றாங்களோ, அங்கே!"

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி.




"ஏன் உங்க முகம் இப்படி வாடிப் போயிருக்கு இன்னிக்கு?"


"கொள்முதல் செஞ்ச பூ சரியா வியாபாரம் ஆகலே!"

- காயக்காடு ராமகிருஷ்ணன்




விஷம விச்சு
விச்சுவும் அவன் நண்பன் ராமுவும் பால்கனியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தனர்.
திடீரென்று மாடியிலிருந்து காதை அடைக்கும் அளவுக்கு சத்தம் கேட்டது.
திடும் திடும் திடும்
மாடி வீட்டிற்குச் சென்று பார்த்தான் விச்சு. அங்கே கோபுவும் பாபுவும் கராத்தே பயிற்சி செய்து கொண்டிருந்தனர்.
ஏய் கோபு, கீழே உள்ள மைதானத்துல பிராக்டிஸ் செய்யக் கூடாதா? சத்தம் காதை அடைக்குது. நாங்க படிக்கணும்.
எங்க வீட்ல கராத்தேவும் போடுவோம். டான்ஸும் ஆடுவோம். அதைக் கேட்க நீ யார்? போடா விச்சு.
விச்சு கோபத்துடன் கீழே இறங்கினான்.
சிறிது நேரத்தில் பலத்த கூச்சல் கேட்டு கோபுவும் பாபுவும் திகைத்தனர்.
கோபுவும் பாபுவும் விச்சு வீட்டுக்கு வந்து பார்த்த போது விச்சுவும் அவன் நண்பர்களும் கட்டைக் குரலில் கச்சேரி செய்து கொண்டிருந்தனர்.
இதைச் சகிக்காத பாபுவும் கோபுவும் மைதானத்துக்குச் சென்று பிராக்டிஸ் செய்ய ஆரம்பித்தனர்
அப்படி வாங்கடா வழிக்கு.

ஒவ்வொன்றும் ரூ.500/- மதிப்புள்ள 2 கைக்கடிகாரங்கள் பரிசு!



பாடம் படிப்பது, விளையாடுவது, கதைப்புத்தகங்கள் வாசிப்பது என நேரத்தை திட்டமிட்டுச் செயல்படுபவர்கள் கோகுலம் வாசகர்கள். உங்கள் திட்டமிடலுக்கு உதவும் வகையில் மாதந்தோறும் 2 கைக்கடிகாரங்களைப் பரிசாக வழங்கவிருக்கிறோம்.

இப்போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமே கலந்து கொள்ள முடியும். தாங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம். பள்ளி முகவரி, வீட்டு முகவரிகளைக் கண்டிப்பாகத் தர வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

சரியான விடை அளித்தவர்களில் குலுக்கல் முறையில் இருவர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி 20.8.2001

இந்த மாதப் போட்டி

கீழே சில பிராணிகளின் வால்கள் உள்ளன. 23ம் பக்கத்தில் அந்தப் பிராணிகளின் படங்களும் தரப்பட்டுள்ளன. வால்களுக்குச் சொந்தமான பிராணிகளைக் கண்டுபிடித்து வரிசைப்படி எழுதி அனுப்புங்கள்.

1 ____________________


2 ____________________

3 ____________________

4 ____________________

5 ____________________

6 ____________________



அட்டையில் : ரெஷ்மிகா

வண்ணப்படம் : ஸ்ரீஹரி



ஆசிரியர்
கோகுலம்
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97



எட்டாம் வகுப்பு ஆசிரியர் தமிழரசன் வருகைப் பதிவேடு எடுத்துக் கொண்டிருந் தார்.

"சுந்தரம்"

....

"சுந்தரம்" — பதில் வராததால், தன் பார் வையை நிமிர்த்தி வகுப்பறையைப் பார்த் தார்.

"சுந்தரம் வரலையா?" என்று அவர் கேட்டதும், ஒரு மாணவன் எழுந்தான்.

"சார், அவன் இனிமேல் பள்ளிக் கூடத்துக்கு வர மாட்டான்" என்றான்.


"ஏண்டா, என்ன காரணம்?"

"அரையாண்டுத் தேர்வுல அவன் எல்லா பாடத்திலேயும் ஃபெயில் ஆயிட்டான் சார். அதனால 'இனிமே படிக்க மாட்டேன்'னு சொன்னான் சார்" என்று ஒரு மாணவன் பதில் சொன்னான்.

"சரி, சரி, நீ உட் கார்" என்ற ஆசிரியர் வருகைப் பதிவேடை எடுத்து முடித்துவிட்டு, பாடம் நடத்தத் தொடங்கினார்.

ஆனாலும் அவர் மனது சுந்தரம் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

அமைதியான, அடக்கமான பையன். ஆனால் அவ சரப்பட்டு இப்படி செய்து விட்டானே என்று வருத்தப் பட்டார்.



அன்று மாலை கடை வீதி யில் தமிழரசன் சென்று கொண்டிருந் தார்.

எதிரில் சைக்கிளில் ஒரு மூட்டையை வைத்து ஓட்டிக் கொண்டு வந்த ஒரு பையன் அவரைப் பார்த்ததும் வேகமாக இறங்கி "வணக்கம் சார்" என்றான்.

ஏதோ யோசனையில் போய்க் கொண் டிருந்த தமிழரசன் சட் என்று திரும்பிப் பார்த்தார்.

"அடே, சுந்தரம்... எப்படிப்பா இருக்கே? ஏன் ரெண்டு நாளா பள்ளிக்கூடத்துக்கு வரலை?"

— தமிழரசன்.

சுந்தரம் ஏன் பள்ளிக்கு வரவில்லை?

பா. இலக்கியா



"சார்... எனக்கு... எனக்கு படிக்கப் பிடிக்கலை சார்"

"ஏம்பா? தயங்காமல் என்கிட்ட சொல்லு."

"அரையாண்டுப் பரீட்சையில நான் ஃபெயிலாயிட்டேன் சார். அதனால எனக்கு இனிமேல் படிப்பு வராதுன்னு முடிவு..."

அவன் பேசி முடிக்கு முன் தமிழரசன் இடைமறித்தார். அவன் தோளில் ஆதரவாகக் கையைப் போட்டு சாலையின் ஓரத்திற்கு அழைத்துச் சென்றவர், "சுந்தரம் உன்கிட்ட ஒண்ணு கேட்பேன் சொல்வியா?" என்றார்.

"கேளுங்க சார்."

"நீ சைக்கிள் ஓட்ட எப்ப கத்துக்கிட்டே?"

"ஒரு வருஷம் இருக்கும் சார்."

"கத்துக்குறப்ப கீழே விழுந்தியா? இல்ல கீழே விழாமலேயே கத்துக்கிட்டியா?"

சார் எதற்கு சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் இப்படி கேட்கிறார் என்று நினைத்த சுந் தரம் "கீழே விழாம எப்படி சார் கத்துக்க முடியும்? நிறைய தடவை விழுந்திருக்கேன். முழங்கால்ல ரத்தக் காயம்கூட ஒரு தடவை ஆனது" என்றான்.

அதைக் கேட்டு புன்முறுவல் பூத்த தமிழரசன் "ஏன் சுந்தரம்... கீழே விழுந்து அடிபட்டதும் 'சைக்கிள் ஓட்ட வேண்டாம்'னு முடிவு செய்தியா?"

"...."

மௌனமாய் நின்றவனை தன்னருகில் தமிழரசன் இழுத்துக் கொண்டார்.

"தோல்விதான் வெற்றிக்கு முதல்படி. சின்னக் குழந்தை நடக்க ஆரம்பிக்கறப்ப நிறைய தடவை கீழே விழும், பார்த்திருக்கியா சுந்தரம்?"

"பார்த்திருக்கேன் சார்."

"கீழே விழுந்துட்டோமென்று குழந்தை நடக்க கத்துக்கற முயற்சியைக் கை விடுறது கிடையாது."

சிறிது இடைவெளி விட்டு தமிழரசன் தொடர்ந்தார்.

"குழந்தை நடக்கக் கத்துகிட்ட மாதிரி, நீ அடிபட்டும் முயற்சியை விடாம சைக்கிள் ஓட்டக் கத்துகிட்ட மாதிரி, ஒரு தடவை ஃபெயில் ஆனால் அதுக்காக மனசைத் தளர விடாம, நல்லா படிச்சு அடுத்த தடவை வெற்றி பெறணும்னு நீ ஏன் நினைக்கலை?"

தமிழரசன் பேசப் பேச சுந்தரத்தின் மனத்தில் குவிந்திருந்த நம்பிக்கையின்மை என்ற மேகம் மெல்ல மெல்ல விலக ஆரம்பித்தது. நம்பிக்கை என்னும் சூரிய ஒளி தெரிய ஆரம்பித்தது. அவன் தமிழரசனின் கைகளைப் பிடித்துக் கொண்டு உறுதியான குரலில் சொன்னான்: "சார், இப்ப எனக்கு நம்பிக்கை வந்திடுச்சு. முயற்சி செய்து படிச்சி கட்டாயம் அடுத்த தேர்வுல நல்ல மதிப்பெண் வாங்கிக் காட்டறேன், சார்."

நிம்மதியாகக் கிளம்பினார் தமிழரசன்.

உங்கள் எதிர்கால வழிகாட்டி

இடம்: ஹைதராபாத்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கிளிண்டன் தன் மகளுடன் இருந்தார். பக்கத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் வி.வி.ஐ.பிக்கள்.

"என்ன மிஸ்டர் பிரெஸிடெண்ட் நீங்க கைக்கடிகாரத்தைக் கொஞ்சம் கழற்றித் தருகிறீர்களா? - ஜேம்ஸ்.

"தயங்காமல் கொடுங்க" என்று கேட்டு வாங்கிய ஜேம்ஸ் அதை ஒரு சிறிய டப்பாவில் போட்டார்.

"மிஸ்டர் பிரெஸிடெண்ட் உங்கள் வாட்சின் விலை என்ன?"

"முப்பது டாலருக்குள் இருக்கலாம்" - கிளிண்டன்.

"நீங்க உங்க வாட்சை மறந்துடுங்க." கையிலிருக்கும் டப்பாவை இரண்டு முறை ஆட்டிவிட்டு அதைக் கவிழ்த்தார் ஜேம்ஸ். கடிகாரத்தைக் காணோம். டப்பாவிலிருந்து அரிசிப் பொரி கொட்டியது.


கிளிண்டனும் நாயுடுவும் முகத்தில் ஆச்சரியம் பொங்க திகைத்தார்கள். கிளிண்டனின் மகளுக்கு ஒரே சந்தோஷம்! கொஞ்சம் சஸ்பென்ஸுக்குப் பிறகு டப்பாவிற்குள் கிளிண்டனைக் கைவிடச் சொன்னார் ஜேம்ஸ். டப்பாவிற்குள் கடிகாரம் பத்திரமாக இருந்தது. எடுத்துக் கையில் கட்டிக் கொண்டு "வெரி நைஸ்" என்று ஜேம்ஸ் முதுகில் தட்டிக் கொடுத்தார் கிளிண்டன்.

நீங்களும்

ஜேம்ஸ் சென்னையைச் சேர்ந்த மாஜிக் நிபுணர்.







மாஜிக் நிபுணராகலாம்!

சென்ற ஆண்டு, கிளிண்டன் ஹைதராபாத்துக்கு விஜயம் செய்தபோது ஆந்திர அரசால் ஸ்பெஷலாக அங்கு அழைத்துச் செல்லப்பட்டார். படு பிஸியாக இருந்த கிளிண்டனின் பயணத்தில் கொஞ்சம் அவ்வப்போது ரிலாக்ஸ் செய்ய சில கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அந்த வகையில் பதினைந்து நிமிடத்திற்கு மாஜிக் ஷோவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதைச் செய்து காட்டும் அரிய வாய்ப்பு ஜேம்ஸுக்குக் கிடைத்து. ஜேம்ஸுக்கு மாஜிக் கலையில் நாற்பது வருட அனுபவம். ''அன்று அந்த வித்தையுடன் வேறு இரண்டு, மூன்று சின்னச் சின்ன வித்தைகளும் செய்து காண்பித்தேன். கிளிண்டனுக்கு ஏக சந்தோஷம். அவ்வளவு உயர்ந்த இடத்திற்கு என்னை கொண்டு சேர்த்தது மாஜிக் கலைதானே'' என்று சொல்கிறார் ஜேம்ஸ்.



சொந்த ஊர் சீர்காழி. நிலபுலன்கள், ரைஸ்மில் என்று வசதியாக வாழ்ந்த குடும்பம். ஆனால் காலச் சக்கரத்தில் குடும்பம் நொடித்துப்போனது. பிழைப்பு தேடி மனைவியுடன் சென்னைக்கு வந்து விட்டேன். சில மாதங்கள் அரிசி வியாபாரம் செய்தேன். சரியாக வரவில்லை. அப்போது மூர்மார்க்கெட் பக்கம் செல்வேன். தெருவிலேயே சிலர் மாஜிக் செய்து காட்டிக் கொண்டிருப்பார்கள். தொப்பிக்குள்ளிருந்து முயல் வரவழைப்பது, வெறுங்கையில் ரூபாய் நோட்டு வரவழைப்பது, இப்படி சின்னச் சின்ன ஐட்டங்களாகச் செய்து காண்பித்து கூட்டத்தினரிடம் சில்லறை வசூல் செய்வார்கள். எனக்கு ஒரே பிரமிப்பாக இருக்கும். தொடர்ந்து அதையே பார்த்துக் கொண்டிருப்பேன்.

''என்னப்பா உனக்கு வேறு வேலை இல்லையா?'' என்று அந்த மாஜிக் நிபுணர்கள் கிண்டலடிப்பார்கள். வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் பொருட்காட்சியில் மாஜிக் ஸ்டால் என்று போட்டிருப்பார்கள். அந்தச்சமயத்தில் பொருட்காட்சிக்கும் அடிக்கடி செல்வேன். எப்படியாவது இந்தக் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற வெறி எனக்கு ஏற்பட்டு விட்டது. ஆர்வம் தவிர வறுமையை ஓட்டிவிட அந்தக் கலை கை கொடுக்கும்

பி. ஜேம்ஸ்

என்று நான் நம்பியதும் மற்றொரு காரணம். உடனே செயலில் இறங்கினேன். மூர் மார்க்கெட்டில் இருந்த புத்தகக் கடைகளை அலசினேன். மாஜிக் சம்பந்தப்பட்ட புத்தகங்களை வாங்கிக் குவித்தேன். இரவும் பகலுமாக அவற்றைப் படித்தேன். ஆனால், வெறும் படிப்பறிவு இருந்தால் மட்டும் மாஜிக் கலையைக் கற்றுக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்தேன். எனவே அந்தக் கலையில் வல்லுனர்கள் பலரைத் தேடிக் கண்டுபிடித்து என் சந்தேகங்களுக்கு விடை தெரிந்து கொண்டேன். முதன்முதலாக ஒரு சிறிய பள்ளியில் என் நிகழ்ச்சி நடந்தது. பயத்தாலும், பதற்றத்தாலும் சிறு சிறு தவறுகள் நடந்தன. சிறுவர், சிறுமியர் சிரித்தனர். இன்று 3000த்துக்கும் அதிகமான வித்தைகள் எனக்குத் தெரியும். ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடத்தி முடித்து விட்டேன். இருந்தும், ஒன்றிரண்டு தவறுகள் இப்போதும் நடக்கத்தான் செய்கின்றன. பிரபல நிபுணர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் அந்தத் தவறுகள் கூட்டத்தினருக்கு அவ்வளவாகத் தெரியாது.

இன்றைய சிறுவர் சிறுமியர் பாட்டு, பரத நாட்டியம், இசைக்கருவிகள் இயக்கும் பயிற்சி என்று நிறைய பணம் செலவழித்துக் கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் மாஜிக் என்பதும் ஒரு கலை. அதைக் கற்றுக் கொள்ள இளம்வயதில் மிகச் சிலர் விரும்பினாலும் பெற்றோர்கள் ஊக்கம் கொடுப்பதில்லை. அப்படியே சிலர் ஊக்கம் கொடுத்தாலும் பணம் செலவழிக்காமல் கற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். மற்ற கலைகளைக் கற்றுக் கொள்ளும்போது பணம் செலவழிக்க தயங்காதவர்கள் மாஜிக்கை மட்டும் இலவசமாகக் கற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். ஒரு குருவின் மூலம் முறையான தட்சிணை கொடுத்து மாஜிக் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாயிரம், மூவாயிரம் பேர் கொண்ட கூட்டத்தை ஆடாமல், அசையாமல் பிரமிக்கச் செய்யும் வல்லமை மாஜிக் நிபுணருக்கு மட்டுமே உண்டு. கோட்டும், தொப்பியும் மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்படுத்தி காட்டத்தான் போட்டுக் கொள்கிறோம். ஒரு மாஜிக் நிபுணருக்கு முக்கியமாக கைவசமாக வேண்டியது பேச்சுக்கலைதான். தனது உற்சாகமான பேச்சுக்கள் மூலம் கூட்டத்தினரின் கவனத்தைத் திசை திருப்பி, கைகளின் மூலம், சூட்சுமங்களைச் செய்ய வேண்டும். செயல் பாடுகளில் அசாத்திய வேகம் வேண்டும். வெறும் பேச்சு மட்டும் இல்லாமல் அவ்வப்போது நகைச்சுவை துணுக்குகளையும் எடுத்து விட்டு சிரிக்கச் செய்ய வேண்டும். சமயோசிதமாகப் பேச வேண்டும்.

சமீபத்தில் என் நிகழ்ச்சி ஒன்றுக்கு மேயர் ஸ்டாலின் வந்திருந்தார். பாம்பை வைத்து செய்யும் மாஜிக் ஒன்று இருக்கிறது. பெட்டியைத் திறந்து பாம்பைக் கூட்டத்தினருக்குக் காண்பித்து விட்டு நான் சொன்னேன். "என்ன பாம்பு பெட்டியில் வந்து ஒளிந்துக் கொண்டிருக்கிறது என்று பார்க்கிறீர்களா? மேயரின் நடவடிக்கையில் நகரமே சுத்தமாக இருக்கிறது. ஒளிந்து கொள்ள இடமில்லாததால்தான் பெட்டியில் வந்து ரெஸ்ட் எடுக்கிறார் பாம்பார்" என்று நான் சொன்னதும் ஒரே கைதட்டல். அது போல பேச்சின் போக்கில் இடை, இடையே எயிட்ஸ் ஒழிப்பு போன்று அரசின் உடல்நலத் திட்டங்களைக்கூட பிரசாரம் செய்யலாம். அஜித்தின் மனைவி யார்? என்றால் உடனே சிறுவர்கள் 'ஷாலினி' என்று குரல் கொடுப்பார்கள். 'அது சரி... திருவள்ளுவர் மனைவியின்


ஓவியப் போட்டி

பல வித சூப்பர் மாடல் கார்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: கார். கார்கள் நிற்கலாம், ஓடலாம், அணிவகுத்துச் செல்லலாம். படங்கள் வண்ணத்தில் இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முழு முகவரியைத் தரவும்.

கடைசி தேதி: 20.8.2001

பெயர் தெரியுமா?' என்று கேட்டவுடன் மௌனம் நிலவும். உடனே 'வாசுகி அம்மையார்' என்று சொல்லிக் கொடுப்பேன். இது போன்று பல விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கும் வாய்ப்பும் இருக்கிறது ஒரு மாஜிக் நிபுணருக்கு.




தாய் மொழியைத் தவிர ஆங்கிலம், ஹிந்தி இரண்டும் பேசத் தெரிந்திருப்பது மிக அவசியம். இந்தியாவில் பேசப்படும் மற்ற மொழிகளையும் தெரிந்து வைத்திருந்தால் உங்களுக்குப் பல இடங்களிலிருந்து வாய்ப்பு வரும். தினசரி பத்திரிகைகளைப் படித்தால் பேசுவதற்கு சப்ஜெக்ட் கிடைக்கும். இப்போதெல்லாம் தொலைக்காட்சிகளில் டாக் ஷோக்கள் நிறைய வருகின்றன. அவற்றைப் பார்த்து வந்தால் பேச்சுக் கலை பழக்கமாகக் கூடும். அதேசமயம் நான் கற்றுக் கொண்டதுபோல் மாஜிக் பற்றிய புத்தகங்களைப் படிக்க வேண்டும். படித்து விட்டு அதில் சொல்லப்பட்டுள்ள சிறிய ஐட்டங்களைச் செய்து பார்க்க வேண்டும். இத் தருணத்தில் ஒரு குருவின் கீழ் செயல்பட்டால் வித்தைகளை விரைவில் கற்றுக் கொள்ளலாம். 'இது மந்திரமல்ல; தந்திரமே' என்பது முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வெறுங் கையில் வரவழைக்கும் ரூபாய் நோட்டுக்களாகட்டும், சாக்லெட்டுகள் ஆகட்டும்; எல்லாம் வானத்திலிருந்து வரவில்லை. மாஜிக் நிபுணர் கைகளிலோ அல்லது உடலிலோ மறைத்து வைத்து விட்டது தான். முயல் குட்டிகளை வைத்து மாஜிக் செய்யலாம். ஆனால் யானையை வைத்து ஒன்றும் செய்யமுடியாது. நான் வெறுங் கையில் பத்து ரூபாய் எடுத்துக் காட்டியவுடன் "நூறு ரூபாய் எடுங்கள்" என்று கூட்டம் குரல் கொடுக்கும். "இப்போது என்னிடம் இருப்பது பத்து ரூபாய்தான். நிகழ்ச்சி முடிந்தவுடன் ஏற்பாடு செய்திருப்பவர் கொடுத்தால்தான் நூறு ரூபாய் நோட்டைப் பார்க்க முடியும்" என்று நான் ஜோக் அடிப்பேன்.

செய்யும் மாஜிக் ஐட்டங்கள் அதிகமாக, அதிகமாக அதற்கான பொருட்கள் நிறையத் தேவைப்படும். நிறைய விஷயங்களை வீட்டில் தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக ஒரு 80 பக்க நோட்டை முதலில் காண்பிக்கும் போது வெறும் வெள்ளைத்தாள்களாகத் தான் தெரியும். அதன்பின், கலர் படங்களாகவும், கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் அதிலிருந்து காட்ட முடியும். விரல்கள் அந்தப் புத்தகத்தை பிரித்துக் காட்டும்போது செய்யும் சூட்சுமத்தால் இது சாத்தியம் ஆகிறது. கலர் மற்றும் கறுப்பு வெள்ளைப் படங்களுடன் முதலில் நாம்தான் அந்த நோட்டைத் தயார் செய்ய வேண்டும். இது ஒரு சிறிய உதாரணம். பல பெரிய, பிரமிக்க வைக்கும் விஷயங்களும் உண்டு.

கொல்கத்தாவில் மாஜிக் கலையை முறையாகத் தெரிந்து கொள்ள இரண்டு வருட பயிற்சி கொடுக்கிறார்கள். திருமணம் மற்றும் வேறு பல சந்தோஷமான நிகழ்ச்சிகளில் மாஜிக் ஷோக்கள் நடத்தலாம். குழந்தைகள் ஆர்வத்துடன் பார்ப்பார்கள். அந்த மகிழ்ச்சியில் சாப்பிடுவதைக்கூட மறந்து விடுவார்கள். மாஜிக்கில் உச்சகட்டமாகக் கண் கட்டு வித்தை, ஹிப்னாடிசம் போன்ற உயர் நிலைகள் இருக்கின்றன.

நீங்களும் இந்தக் கலையைப் பயின்று மற்றவர்களை மகிழ்விக்க என்னுடைய வாழ்த்துக்கள்.

சந்திப்பு: **ப்ரியன்**
படங்கள்: **ஸ்ரீஹரி**



• பைசா கோபுரம்

• டோனி பிளேர்





• முஷாரப்

கோதுவம் நியூஸ்

மீண்டும் டோனி பிளேர்

பிரிட்டனில் நடந்து முடிந்த தேர்தலில் ஆளும் தொழிற்கட்சி அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்கிறது. தொழிற்கட்சியின் தலைவரும் பிரிட்டிஷ் பிரதமருமான டோனிபிளேர் இரண்டாவது முறையாகப் பிரதமர் பதவி ஏற்றுக் கொண்டார். எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வி அடைந்து விட்டது.

அதிபர்

1999ம் ஆண்டு அக்டோபர் 12ஆம் தேதி ராணுவப்புரட்சி நடத்தி, நவாஸ் ஷெரீபைப் பிரதமர் பதவியிலிருந்து தூக்கி எறிந்தார் தளபதி முஷாரப். பிறகு நாட்டின் ஆட்சித் தலைவராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். ஜூன் 20ந் தேதி பாகிஸ்தானின் அதிபர் ரபீக்தராரை அப்பதவியிலிருந்து தூக்கி விட்டு நாட்டின் புதிய அதிபராகிவிட்டார் ஐம்பத்து எட்டு வயதாகும் முஷாரப்.

சாய்ந்த கோபுரம்!


இத்தாலி நாட்டின் பைசா நகரில் உள்ள கோபுரம் கொஞ்சம் கொஞ்சமாக சாய்ந்து கொண்டு வந்ததால் சாய்ந்த கோபுரம் என்றே அழைக்கப்பட்டது. வரலாற்றுச் சின்னமான இக் கோபுரம் முற்றிலும் சாய்ந்து விடாமல் காக்க பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது பணி முடிந்து விட்ட நிலையில், வரும் நவம்பர் மாதம் முதல் சுற்றுலாப் பயணிகள் இதில் மீண்டும் ஏறிப்பார்க்கலாம் என்று அறிவிக்கப்பட் டுள்ளது.

10 லட்சம் ஆண்டுகளில்...

இன்னும் பத்து லட்சம் ஆண்டுகளில் பூமியில் உயிரினங்கள் எல்லாம் அழிந்து விடும். 100 ஆயிரம் கோடி ஆண்டுகளில் பிரபஞ்சமே அழிந்து விடும் என்று 'டைம்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. புதிய அறிவியல் ஆய்வை மேற்கோள் காட்டி இச்செய்தி வெளியிடப்பட்டுள் ளது. ஈர்ப்பு விசைக்கு எதிரான சக்தியின் கார ணமாக பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து நட்சத்திரக் கூட்டங்களும் விரைவாக விலகிச் சென்று கொண்டே இருக்கின்றன. தற்போது தொலை நோக்கி மூலமாக நாம் பார்க்கும் நட்சத்திரக் கூட்டங்கள் நம்மால் பார்க்க இயலாத படி மறைந்து போகும். இறுதியில் சூரியனும் நம்மை விட்டு விலகிவிடும். பூமிக்குக் கிடைக்கும் வெப்பமும் வெளிச்சமும் குறைந்து விடும். இதனால் பூமியில் உயிரினங்கள் அழிந்துவிடும். பிரபஞ்சம் முழுவதும் இருட்டாகவும் குளிராகவும் இருக்கும் என்று கூறியுள்ளது டைம் பத்திரிகை.

சோகம்

மங்களூர்–சென்னை ரயில், கேரளத்தில் உள்ள கோழிக்கோடு அருகே கடலுண்டி ஆற்றுப் பாலத்தில் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. பலத்த மழையால் ஏற்பட்ட ஆற்று வெள்ளத்தில் பெட்டிகள் கவிழ்ந்தன. இதில் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்திருக் கின்றனர். மீட்பு பணியில் பொது மக்களும் உதவினர். விபத்து நடந்த இப்பாலம் 100 ஆண்டு கள் பழமை வாய்ந்ததால் பாலத்தில் விரிசல் ஏற்பட்டு விபத்து நடந்திருக்கலாம் என்று கூறப் படுகிறது.



ரோஜா மணம் வீசுது!

எங்கள் வீட்டுத் தோட்டம்போல்
எங்கும் காண முடியுமா?
நீங்கள் வந்து பாருங்கள்;
நீளமான முருங்கைக் காய்!

நெடிதுயர்ந்த மரத்திலே;
நெல்லிக் காய்கள் ஆயிரம்!
கொடிக் கொடியாய் பாகற்காய்;
கொத்துக் கொத்தாய் காய்த்திடும்!

கருங்குயிலும் பாடுது;
கரிவேப்பிலை மரத்திலே!
தென்னங்கீற்று அழைக்குது;
தென்றல் வந்து பேசுது!

முல்லை மொட்டு மலருது;
முத்துப் போலச் சிரிக்குது!
ரோஜா மணம் வீசுது;
ஜோரா எட்டிப் பார்க்குது!

ஞா.மாடசாமி

கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்



● **வி. சதீஷ், கொக்கலாடி.**

? ஐஸ் தின்றால் உள்நாக்கு வளரும் என்று கூறுகிறார்களே... அது உண்மையா, டாக்டர்?

! அடிக்கடி ஐஸ் தின்றால் வாய்க்குள் நோய்த்தொற்று ஏற்பட அதிக வாய்ப்புண்டு. அப்போது உள் நாக்கு பாதிக்கப்படலாம். ஆனால், உள்நாக்கில் வீக்கம் ஏற்படுமே தவிர அது வளராது. தகுந்த நுண்ணுயிர்க்கொல்லி மருந்தைச் சாப்பிட, அந்த வீக்கம் சில நாட்களில் குணமாகி விடும். மேலும், ஐஸ் தின்பதால் தொண்டையில் புண் உண்டாகும். தொண்டைச் சதையும் மூக்குச் சதையும் வளரும். அடிக்கடி தடுமம் பிடிக்கும். மூக்கு ஒழுகும். காற்றறை அழற்சி நோய் வரும். காது வலிக்கும். ஆகையால், ஐஸ் தின்பது உடல் நலனுக்கு நல்லதல்ல, சதீஷ்.

● **எஸ். கதிர்வேலு, திருப்பூர் - 5.**


? என் நண்பனுக்கு இடது மார்பில் சிறிய கட்டி உள்ளது. அதனால் வலி எதுவுமில்லை. அக்கட்டியால் நண்பனுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதா?

! நண்பனின் வயதை நீங்கள் குறிப்பிடவில்லை. பொதுவாக, சில இளைஞர்களுக்கு மார்புக் காம்பின் அடிப்புறத்தில் சிறிய கட்டி உருவாவதுண்டு. பாலியல் இயக்குநீர்களின் செயல்பாடுகளில் உண்டாகின்ற சிறு குறைபாடு காரணமாக இது ஏற்படும். இதனால் பாதிப்போ, ஆபத்தோ ஏற்படுவதில்லை. வயதாக ஆக கட்டி கரைந்துவிடும். தவிர, மார்பில் சாதாரண திசு வளர்ச்சிக்கட்டிகள் வரலாம். இவையும் ஆபத்தற்றவையே! இவற்றை சிறு அறுவை சிகிச்சை மூலம் அகற்றிவிடலாம். முதுமையில் இம்மாதிரி கட்டிகள் வந்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவேண்டும். ஏனென்றால், அவை புற்றுநோய்க் கட்டிகளாக உருவாவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

● **ப. காளிதாசன், நீர்விளங்குளம்.**

? வாய் துர்நாற்றம் ஏற்படுவது ஏன்? இதைப் போக்க என்ன வழி?

! பற்சொத்தை, சீழ் பிடித்த பல் ஈறுகள், பற்களின் இடுக்குகளில் உணவுப் பொருள்கள் தங்குதல், வாய்ப்புண், தொண்டைப்புண் ஆகிய காரணங்களால் வாயில் துர்நாற்றம் ஏற்படலாம். இவை தவிர, தொண்டைச்சதையும் மூக்குச்சதையும் கிருமிகளால் பாதிக்கப்பட்டு, அழற்சி ஏற்பட்டிருந்தாலும் வாய்துர்நாற்றம் ஏற்படும். இன்னொன்று, வாய் துர்நாற்றத்திற்கு வாயில்தான் பிரச்னை



இருக்க வேண்டும் என்பதில்லை. பிரச்னை வயிற்றிலும் இருக்கலாம். நுரையீரல்களிலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, வயிற்றுப்புண், அஜீரணம், மலச்சிக்கல், நுரையீரல் அழற்சி, நுரையீரல் சீழ்க்கட்டி போன்றவையும் வாய்துர்நாற்றத்தை உண்டாக்குகின்றன. ஆகவே, வாய்துர் நாற்றத்தைத் தவிர்க்க முதலில் பல் மருத்துவரையும் பிறகு காது - மூக்கு - தொண்டை நிபுணரையும் ஆலோசித்து, காரணமறிந்து சிகிச்சை பெற வேண்டும். குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் பற்களைச் சுத்தப்படுத்திக் கொள்வது வாய்துர்நாற்றத்தைத் தவிர்க்க உதவும். தினமும் இரு வேளை பல் துலக்கி, சிறுவயதிலிருந்தே பற்களைத் தூய்மையாகப் பராமரிப்பது முக்கியம். உணவு உண்டபின் வாயை நன்கு கொப்பளிப்பது அவசியம். தேவைப்பட்டால், கிருமிநாசினிக் கலவையைத் தண்ணீரில் கலந்து வாயைச் சுத்தப்படுத்துவது நல்லது.

● டி.எம். முருகானந்தம், சுப்பிரமணியபுரம்.

? தேமலைப் போக்க சரியான வழி என்ன டாக்டர்?

! தினமும் இரண்டு வேளை சோப்புப் போட்டுக் குளிக்க வேண்டும். தோலின் மேல் 20% சோடியம் தயோசல்ஃபேட் கரைசலை இரவில் பூசி அடுத்தநாள் காலை குளித்து சுத்தமான உடைகளை உடுத்த வேண்டும். உபயோகித்த உடைகளை நன்கு சோப்புப் போட்டுத் துவைத்து வெயிலில் காயவைத்து, இஸ்திரி போட்டு அணிய வேண்டும். பகலில் 'க்ளோட்ரிமசோல்' பவுடரை உடலில் பூசிக் கொள்ளலாம். குறைந்தது 6 வாரங்களுக்குச் சிகிச்சை பெற வேண்டும். ஃபுளுக்கோனசோல் மாத்திரையை வாரம் ஒன்று வீதம் 6 வாரங்களுக்குச் சாப்பிட வேண்டும். குடும்ப மருத்துவரின் நேரடி ஆலோசனைப்படி இச்சிகிச்சையை மேற்கொள்வது நல்லது.

● கே. நித்யா, கெட்டிச் செவியூர்.

? பல் சொத்தை விழுந்தபின் சொத்தையை அடியோடு அழிக்க இயலாதா?

! பல் சொத்தை, பல்லின் வேர் வரை செல்வதற்கு முன்பு மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுவிட்டால், சொத்தையை அகற்றிவிட்டு, பற்குழியை அடைத்துவிடலாம். பல்லுக்குப் பாதுகாப்பு கிடைத்துவிடும். பற்சொத்தை, பல்லின் வேரை அடைந்துவிட்டால் பல்லை அகற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். எனவே, பற்சொத்தையின் ஆரம்ப அறிகுறியான கரும்புள்ளி பல்லில் தெரிந்தவுடனேயே சிகிச்சையைத் துவங்கிவிட வேண்டும். அப்போதுதான் பற்சொத்தையை அடியோடு அழிக்க இயலும்.

ஐஸ் தின்றால் உள்நாக்கு வளருமா?

5 பூபதியைக் காணோம்!

வாசலில் தெரிந்த பல்லவி வீட்டுக்குள் வரும்வரை காத்திருக்க முடியாமல் நெடுமாறன் எழுந்து வேக வேகமாக வெளியே வந்தான்.

"பல்லவி, என்ன ஆச்சு? அருள்மொழிக்கு ஆன மாதிரி உனக்கும் ஏதாவது இடைஞ்சலா?"

நெடுமாறன் அக்கறையுடன் கேட்டான்.

"ஏன் இப்படி சோகமாயிருக்கே? ஒருவேளை இந்தக் கடிதமும் நம்மை ஏமாத்தற போலிக் கடிதமா"?

நெடுமாறன் மேலும் கேட்டான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. உள்ளே வா. எல்லாத்தையும் விவரமா சொல்றேன்."

சொல்லிவிட்டு பல்லவி, நெடுமாறனைத் தாண்டி வீட்டுக்குள் நுழைந்தாள். நெடுமாறன் அவள் பின்னே சென்றான்.

சிந்தாதிரிப்பேட்டை பல்லவிக்குப் பழக்கமான பகுதிதான். மார்க்கெட் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி பூபதி எழுதிய கடிதம் கூறிய முகவரியை எளிதாகக் கண்டு பிடித்து அந்த வீட்டுக்கு முன்னே நின்றாள்.





சின்னஞ் சிறிய வீடு. உள்ளே ஐந்தாறு குடித்தனங்கள் இருக்கலாம் என்று யூகித்த பல்லவி அவற்றுள் பூபதி குடியிருக்கும் பகுதியைத் தேடி அதன் முன் நின்றாள். 'பூபதி! பூபதி!' என்று குரல் கொடுத்தாள்.

பல்லவி மீண்டும் "பூபதி! பூபதி!" என்று குரல் கொடுத்தாள்.

"யாரு...?" என்னும் கேள்வி ஏதோ நோயாளிக் குரல் போல நலிந்து மெலிந்து ஒலித்தது. பிறகு கதவு மெல்ல திறந்தது. உள்ளே இருந்து சுமார் ஐம்பது வயது தோற்றத்துடன் ஓர் அம்மா வெளிப்பட்டாள். அழிக்க முடியாத வறுமை அரக்கன் அவள் இடுப்பில் அமர்ந்து ஆட்சி செய்வது தெளிவாகத் தெரிந்தது. அந்தத் தோற்றத்தைப் பார்த்து துணுக்குற்றாள், பல்லவி.

"அம்மா, நான் அமைந்தகரையிலேருந்து வரேன். நாங்க புக்பேங்க் நடத்தறோம். பூபதி சில புத்தகங்கள் வேணும்னு கடிதம் எழுதியிருந்தான். அந்தப் புத்தகங்களைக் கொடுத்துவிட்டுப் போகலாம்னு வந்திருக்கேன்" என்ற பல்லவி, வலக்கையில் தொங்கிய புத்தகம் உள்ள பையைக் காட்டினாள். தொடர்ந்து "பூபதி வீட்டிலே இல்லைங்களா!" என்று கேட்டாள்.

அவ்வளவுதான்!

அவள் 'ஓ'வென்று உரத்த குரலெடுத்து அழ ஆரம்பித்து விட்டாள்.

பக்கத்து குடித்தனங்களிலிருந்து இரண்டு பெண்கள் அங்கே ஓடி வந்தனர்.

"அலமேலு... இப்ப எதுக்கு அழறே...?" என்று கேட்ட ஒரு பெண்மணி, பல்லவியைப் பார்த்து 'நீ யாரு?' என்று கேட்டாள்.

அப்போதும் அந்த 'அலமேலு' அழுது கொண்டேயிருந்தாள்...

பல்லவி இப்படிப்பட்ட சூழலை எப்போதும் கண்டதில்லை. அவள் மெதுவாகத் தான் வந்த காரணத்தை விளக்கினாள்.

'அப்போதும் அழுது கொண்டிருந்த அலமேலுவை அதட்டி அடக்கிய பெண்மணி, அவள் ஏன் அழுகிறாள் என்பதைச் சொல்லத் தொடங்கினாள். அவள் கூறிய செய்தி இதுதான்:

பல்லவி தேடி வந்த பூபதியின் தாயார்தான் அழுது கொண்டிருந்த அம்மையார்.

டாக்டர் பூவண்ணன்

பூபதியின் தந்தை சில ஆண்டுகளுக்கு முன் இறந்து போனார். தாயார்



சகள்!

அலமேலுதான் நாலு வீட்டில் வீட்டு வேலை செய்து சம்பாதித்து மகனை வளர்த்து வந்தார். மகன் பூபதி நல்ல பிள்ளை. படிப்பிலே சிங்கம்! பண்பிலே தங்கம்! மகன் பெருமையிலே, அவளது வறுமைத் துயரத்தையெல்லாம் மறந்து வாழ்ந்தாள் அலுமேலு.

"இதற்குள் தன் அழுகையை முற்றிலும் குறைத்துக்கொண்டே பூபதியின் தாய், ''அவனைக் காணோமே! அவன் காணமா போயிட்டானே..'' என்று மீண்டும் தன் அழுகையை ஆரம்பித்தாள்.

பழையபடி பக்கத்து போர்ஷன் பெண்மணிதான் அவளை அடக்கிவிட்டுப் பேசினாள்.

பூபதி காணாமல் போய்விட்டான்.

பத்து நாட்களுக்கு முன், பூபதி வழக்கம் போல பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பினான். பள்ளிச் சீருடையை மாற்றிக் கொண்டு, கையில் ஒரு புத்தகம் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். வீட்டில் படிக்க வசதியில்லை. அதனால் அருகேயிருக்கும் கோயிலுக்குப் போய் ஒரு மூலையில் அமர்ந்து படிப்பது வழக்கம். இருட்டிய பிறகும் அங்கே விளக்கொளி பிரகாசமாகவே இருக்கும். இரவு ஏழு–எட்டு மணி வரை கோயிலிலிருந்து படிப்பான். அதனால் அவனை அந்தப் பகுதியில் எல்லார்க்கும் தெரியும்.

அன்றும் அதைப் போலவே புத்தகம் எடுத்துக் கொண்டு கோயிலுக்குப் போனவன் இரவு வீட்டுக்கே வரவில்லை. பதறிப் போன தாய் கோயில் அர்ச்சகர் வீட்டுக்கே போய் விசாரித்தாள்.

"பூபதி வந்தானே! ஏழு, ஏழரை வரை படிச்சிட்டிருந்தான். பார்த்தேனே... அப்புறம் போயிட்டான். வீட்டுக்கு வராம எங்கே போனான்?" அர்ச்சகரும் வியப்படைந்தார்.

அர்ச்சகர் வீட்டுக்கு அலமேலு போகும்போதே மணி பத்து. அதற்கு மேலும் அலமேலு மகனைத் தேடியலைந்தாள். பூபதியின் பள்ளி நண்பர்கள் சிலரை அவளுக்குத் தெரியும். அவர்கள் வீடுகளுக்குச் சென்று தேடினாள். தூங்கிறவர்களை எழுப்பி விசாரித்தாள். 'பள்ளி முடிந்ததும் பூபதி வீட்டுக்குப் போனான்' என்றார்கள். அதற்குமேல் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

அலமேலு நள்ளிரவுக்குப் பின் வீட்டுக்குத் திரும்பினாள். இரவு முழுவதும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

மறுநாள் பள்ளிக்கூடத்துக்கே சென்று விசாரித்தாள்.

பூபதி நல்லவன். படிப்பிலும் முதல் ராங்க் வாங்கும் பையன். அதனால் தலைமை ஆசிரியருக்கு அவனைத் தெரியும். அவரும் மாணவர்களிடம் விசாரித்தார். பலன் இல்லை.

"பூபதி என்ன சின்னக் குழந்தையா? பத்தாம் வகுப்பு படிக்கிற பையன். எப்படியும் வந்துடுவான்" என்று அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் சமாதானப் படுத்தினர்.

அலமேலுவின் சோகம் குறையவில்லை. அவள் தினமும் 'பூபதியைப் பார்த்தீங்களா?' என்ற ஒரே கேள்வியை, ஓராயிரம் பேரிடம் கேட்டிருப்பாள். பலன் கிடைக்கவில்லை. மகன் திரும்பவில்லை.

பல்லவி இந்தச் சோகக் கதையைக் கேட்டுத் தானும் சோகமானாள்.


"போலீஸில் புகார் செஞ்சீங்களா?"

பல்லவி அலுமேலுவைக் கேட்ட இந்தக் கேள்விக்கும் அடுத்த போர்ஷன் அம்மாவே பதில் சொன்னாள்.

"அதுவும் செஞ்சோம். என் வீட்டுக்காரர்தான் அலுமேலுவை ஜேப்பியார் பார்க் பக்கத்திலே இருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைச்சுட்டுப் போய் புகார் கொடுத்தார். புகார் கொடுத்து ரெண்டு மூணு நாலுதான் ஆவுது. இன்னும் அவங்களும் பூபதியைக் கண்டுபிடிக்கலே..."

பல்லவிக்கு இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை.

பூபதியின் தாயாருக்கு ஆறுதல் சொல்லும் வயதில்லை. அதனால், 'பயப்படாதீங்க... உங்க மகன் வந்திருவான்' என்று நம்பிக்கையூட்ட விரும்பினாள்.



"மேலே போட்ட பந்து கீழே விழுவதற்கான காரணம் என்ன தெரியுமா?"

"பந்துக்கு மேலே இருக்கப் பிடிக்கலை, அதனால்!"

— ஆர். தங்கராஜ்

எப்படி நம்பிக்கையூட்டுவது? எந்த வார்த்தைகள் சொல்லி நம்பிக்கையூட்டுவது?

திடீரென்று பல்லவிக்கு ஒரு யோசனை தோன்றியது.

தான் கொண்டு வந்த புத்தகங்களை எடுத்து அலுமேலுவிடம் நீட்டினாள்.

அலமேலு அவற்றை வாங்காமல் பல்லவியின் முகத்தைப் பார்த்தாள்.

"அம்மா, இந்த மூணும் பூபதி கேட்ட புத்தகங்கள் இந்தப் புத்தகங்களைக் கொடுக்கத்தான் வந்தேன். வாங்கிக்கோங்க" என்றாள், பல்லவி.

"பூபதியே போயிட்டான். புத்தகங்களை வாங்கி நான் என்ன பண்றது?"

அலமேலு விரக்தியுடன் கேட்டாள்.

"அப்படி சொல்லாதீங்கம்மா. பூபதி நிச்சயம் வருவான்னு என் மனசு சொல்லுது. வந்து தொடர்ந்து படிப்பான்! அதனாலே அவனுக்கு இந்தப் புத்தகங்கள் நிச்சயம் தேவைப்படும். வாங்கிக்கோங்க!"

பல்லவி சொன்னதும், அலமேலுவின் சோகம் ஆழ்ந்த முகத்தில் ஒரு மின்னல் வீச்சு போல மகிழ்ச்சி பளிச்சிட்டது.

"அம்மாடி, நீ யாரு பெத்த பொண்ணோ... என் மகன் வருவான்னு சொல்லிப் புத்தகங்களைக் கொடுக்கறே! உன் வாக்கை கருமாரி வாக்கா நினைச்சு வாங்கிக்கிறேன்" என்ற அலமேலு கண்களைத் துடைத்துக் கொண்டு, அவிழ்ந்த தலை முடியைச் சுருட்டி முடிந்துகொண்டு, எழுந்து நின்று இரு கைகளையும் நீட்டி, கடவுள் பிரசாதம் போல அந்தப் புத்தகங்களை வாங்கிக் கொண்டாள்.

பல்லவி இப்படிச் சொன்னதும், அதுவரை சோகத்தோடு கேட்டு வந்த நெடுமாறன் தன் முகத்தில் சுடரொளி தோன்ற, "சபாஷ் பல்லவி சபாஷ்! நம்பிக்கை மலையையும் நகர்த்தும்! அவநம்பிக்கை யானை பலத்தையும் அழிக்கும்! நீ நம்பிக்கை உண்டாக்கிவிட்டு வந்திருக்கிறாய். அது இந்தத் தாயைக் காக்கும். தாயின் கவலையைத் தற்காலிகமாகவாது போக்கும்!" என்று பாராட்டினான்.

"நெடுமாறா! அந்தத் தாய் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, புத்தங்களைப் பெற்றுக் கொண்டதும், என் கண்கள் கண்ணீரைத் தேக்கின. அந்தத் தாயின் சோகம் என்னைத் தொத்திக் கொண்டதோ என்று சந்தேகப்படுகிறேன்."

பல்லவி சோகக் குரலில் சொன்னாள்.

"பல்லவி, இப்போது மணி ஏழரைதான். இளங்கோவையும் அருள்மொழியையும் வரவழைத்து இந்த விஷயத்தைச் சொல்லலாமா?"

நெடுமாறன் கேட்டான்.

"வர வழை! சொல்லுவோம்! சோகத்தைப் பகிர்ந்து கொண்டால், அதன் வேகம் குறைகிறதா — அதன் தாக்கம் குறைகிறதா என்று பார்ப்போம்"



பல்லவி இப்படி சொன்ன இருபதாம் நிமிடத்தில் இளங்கோவும் அருள்மொழியும் அங்கே இருந்தனர்.

"இருவருக்கும் யாரோ ஒரே மாதிரி வசனம் எழுதிக் கொடுத்தது போல, "என்ன ஆச்சு? என்ன ஆச்சு?" என்று ஒரே மாதிரி, ஒரே கேள்வியை இரண்டுமுறை கேட்டபடி அமர்ந்தனர்.

இப்போது நெடுமாறன் நடந்ததைக் கூறினான். பல்லவி சொன்ன அனைத்தையும் சொன்னான். அவன் சொல்லி முடித்ததும், இளங்கோவும் அருள்மொழியும் சிந்தனையில் ஆழ்ந்தனர்.

"என்ன சிந்தனை?" என்று கேட்டான் நெடுமாறன்.

"பூபதி காணாமல் போனதற்கு என்ன காரணமிருக்கும் என்று யோசிக்கிறேன். பணக்கார சிநேகிதன் இருந்து, அவன் 'வாடா எங்களூருக்குப் போயிட்டு வரலாம்'னு பெங்களூருக்கோ பெனாரகுக்கோ அழைச்சிட்டுப் போயிருக்கலாம்" என்றான், இளங்கோ.

அருள்மொழி ஒன்றும் சொல்லவில்லை. இளங்கோ சொன்னதைக் கேட்டதாகவே தெரியவில்லை. அவன் தன் சிந்தனையிலிருந்து மீளவில்லை.

"அருள்மொழி, பல்லவி சொன்னதைக் கேட்டாயே, அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

நெடுமாறன் கேட்டதும்கூட அவன் காதில் விழவில்லை.

அவனைப் பிடித்து உலுக்கினான் இளங்கோ. அப்புறந்தான் "என்ன?" என்ற கேள்வியுடன் சிந்தனை உலகிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தான், அருள்மொழி.

"அருள்மொழி பல்லவி சொன்னதைக் கேட்டே, உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டான் நெடுமாறன்.

"பல்லவி சொன்னதைக் கேட்டதும், எனக்கு டீவியில் பார்த்த ஒரு செய்தி நினைவுக்கு வந்தது" என்றான் அருள்மொழி. 'அது என்ன செய்தி?' என்று அவர்கள் கேட்பதற்கு இடந்தராமல், தொடர்ந்து அந்தச் செய்தியைக் கூறினான்:

"தூர்தர்சனில் செய்திக்கு முன்பு சில காவல் துறை அறிவிப்புகள் வரும். அதிலே, "திருவொற்றியூரில் வசிக்கும் ஒரு பையன் காணாமல் போய் விட்டான். பள்ளிக்கூடம் போனவன் வீட்டுக்குத் திரும்பவில்லை. பையன் பத்தாம் வகுப்பு படிப்பவன். பெயர் சுந்தரம்" என்னும் விளம்பரத்தைக் கண்டதைக் கூறினான். அருள்மொழி அவனது உயரம் — நிறம் போட்டிருந்த சட்டை பற்றி விளக்கி, 'இவனைப் பற்றித் தகவல் கிடைத்தால் காவல்துறை ஆணையருக்குத் தெரிவிக்குமாறு, அறிவிப்புக் கூறியது.

அருள்மொழி இதைக் கூறிவிட்டு, "நண்பர்களே, சிந்தாதிரிப்பேட்டை பூபதியும், திருவொற்றியூர் சுந்தரமும் மாணவர்கள், பத்தாம் வகுப்புப் படிப்பவர்கள், ஓரளவு ஏழை மாணவர்கள். இருவரும் காணாமல் போனதற்கு ஒரு பொதுக்காரணம் இருக்குமோ? என்று யோசிக்கிறேன்" என்றான்.

நெடுமாறன், "ரெண்டு சம்பவம் ஒரே மாதிரியாய் இருப்பதை வைத்து, அதற்கு ஒரு பொதுக்காரணம் கூற முடியுமா? சுந்தரம், பூபதி போல இன்னும் யாராவது காணாமல் போயிருப்பதாகத் தெரிந்தால், நீ சொல்வது போல ஒரு பொதுக்காரணம் இருக்கலாம்" என்றான்.

அதேசமயம் அழைப்பு மணி ஒலித்தது.

அது, சுந்தரம் — பூபதி போல இன்னொரு மாணவன் காணாமல் போன செய்தியைத்தான் சொல்லப் போகிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது.

— தொடரும்

பாட்டிலுக்கு வியர்க்கிறது!

வியர்வை

என் தங்கை சுபா சுட்டிப் பெண். ஒரு நாள் ஃபிரிட்ஜிலிருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்தேன். ரொம்பக் குளிர்ச்சியாக இருந்ததால் சிறிது நேரம் கழித்துக் குடிக்கலாம் என்று டேபிளில் வைத்து விட்டேன். சிறிது நேரத்தில் பாட்டிலின் வெளிப்புறத்தில் முத்து முத்தாக தண்ணீர் திவலைகள் படிந்திருந்தன. இதைப் பார்த்த சுபா "அண்ணா! வெயில் ரொம்பத்தான் கொளுத்தறது. அங்கே பார், பாட்டிலுக்குக் கூட எப்படி வியர்த்துக் கொட்டுகிறது" என்றாளே பார்க்கலாம்! என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை.



— பாலு, பாளையங்கோட்டை.


என்ன ரேடியோ?

எங்கள் வீட்டில் ரேடியோ வாங்க முடிவு செய்தோம். எந்த கம்பெனி ரேடியோ வாங்கலாம் என்று கலந்துரையாடினோம். இறுதியில் பிலிப்ஸ் ரேடியோ வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அன்று மாலையே ரேடியோ எங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்தது. எல்லோரும் ஆர்வமாக ரேடியோவை ஆன் செய்தோம். 'ஆல் இண்டியா ரேடியோ, மதுரை வானொலி நிலையம்' என்று அறிவிப்பாளரின் குரல் கேட்டது. உடனே என் குட்டித் தம்பி "அப்பா ஆல் இண்டியா ரேடியோ வாங்கிட்டீங்களே! பிலிப்ஸ் ரேடியோ வாங்கலையா?" என்றான் அப்பாவியாக. எல்லோரும் சிரித்துவிட்டோம்.



— நா. பாண்டியம்மாள்,
ஒன்பதாம் வகுப்பு,
சேது மாணிக்கம் உயர் நிலை பள்ளி,
மேலச்சீத்தை, இராமநாதபுரம் மாவட்டம்.

எல்லாம் இருக்கா?



ஒரு நாள் நானும் மாமாவும் கோயிலுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். பின்னால் உட்கார்ந்திருந்த மாமா என்னிடம் 'வாழைப் பழம், சூடம், தேங்காய் இருக்கா?' என்று ஒவ்வொன்றாகக் கேட்டுக் கொண்டு வந்தார். நானும் கூடையைப் பார்த்து 'இருக்கு, இருக்கு' என்று சொல்லிக் கொண்டு வரும் போது எதிரே வந்த எருமை மாட்டைப் பார்க்காமல் அதன்மேல் மோதி விட்டேன். இருவரும் விழுந்து எழுந்தோம். மாமா "ஏண்டா பிரேக் இல்லையா?" என்று

எங்கள் ஊரில் நடந்தது!

கேட்டார். "அது தான் மாமா இல்லை" என்று நான் வழிந்ததைப் பார்த்து மாமா வலியையும் பொருட்படுத்தாமல் சிரித்து விட்டார்.

— ப. காளிதாசன், நீர்விளங்குளம்.

சுற்றி.. சுற்றி...

டீ.வியில் பழைய படம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதில் ஒரே பாடலில் ஒரு குழந்தை, சிறுவனாகி வளர்ந்து விட்டதாகக் காட்டினார்கள். இதைப் பார்த்துக் கொண்டு இருந்த எங்கள் தம்பி, சமையலறையில் இருந்த அம்மாவிடம் சென்று, "என்னையும் சின்ன சைக்கிளில் உட்கார வெச்சு சுத்தி, சுத்தி வந்து பாடும்மா" என்றான். அம்மா ஒன்றும் புரியாமல் ஏன் என்று கேட்க, வாண்டு, "அப்பத்தான் நான் சீக்கிரம் பெரிய ஆளா ஆவேன்" என்று சொல்ல அனைவரும் சிரித்து விட்டோம்.

— எம். மகேஷ், தாரமங்கலம்



முதல் ரேங்க்

நானும் என் அக்காவும் படிப்பில் கட்டி. முதல் ரேங்க் வாங்குவோம். என் அத்தைப் பெண் சபிதா சுமாராய் படிப்பாள். எங்கள் பாட்டிக்கு சபிதா முதல் ரேங்க் வாங்காதது சற்று வருத்தம்தான். அவளை ஒரு ஆசிரியரிடம் டியூஷனுக்கு அனுப்பினார்கள். கடந்த பிப்ரவரி மாதத் தேர்வில் சபிதா முதல் ரேங்க் வாங்கியிருப்பதாக எங்கள் பாட்டி சொன்னார்கள். இதைக் கேட்டு ஆச்சரியப்பட்ட எங்கள் அப்பா அவளை அழைத்து. "எப்படிம்மா நீ முதல் ரேங்க் வாங்கினே?" என்று கேட்டார். உடனே அவள் "முதல் ரேங்க் வாங்குற பெண் பரீட்சைக்கு வரலை" என வெகுளியாய் சொல்ல எல்லோரும் சிரித்து விட்டோம்.

— சு. சௌம்யாயனி,



எட்டாம் வகுப்பு, 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் ம.மே.நி. பள்ளி,
தூத்துக்குடி.

வெள்ளரிக்காய்

எங்கள் தெருவில் ஒருவர் "வெள்ளிருக்கா, வெள்ளிருக்கா" என்று கூவிக் கொண்டே சென்றார். என் தங்கை அழுது அடம்பிடித்து ஒரு ரூபாய்க்கு 'வெள்ளரிக்காய்' வாங்கச் சென்றாள். வரும்போது அவள் வெறும் கையுடன் திரும்பவே, "ஏன் வெள்ளரிக்காய் வாங்கலை?" என்று கேட்டேன். என் தங்கை "அவர் வெள்ளரிக்காய் விக்கல, பழைய வெள்ளி இருக்கா" என்று கேட்டுக் கொண்டே செல்கிறார் என்று ஏமாற்றத்துடன் சொன்னாள்.

— பாண்டியம்மாள், இராமநாதபுரம்.





பொன்முடியில் பதித்த மாணிக்கங்கள்!

● தாவரங்களைத் தெரிந்து கொள்வோம், ஆழி.வே. ராமசாமி, பக். 144, ரூ. 35, குமரிப் பதிப்பகம், 8, நிலா தெற்கு வீதி, நாகப்பட்டினம், 611 001.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் பொலிவான அறிவியல் படைப்பு. ஒரு படைப்பாளிக்கு ஓவியம் தெரிந்திருந்தால் எத்தனை விஷயங்களைச் சாதிக்கலாம் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக் காட்டு. விளக்கப் படங்கள் பேசுகின்றன. சிறுவர் இலக்கியத்தின் அறிவியல் பிரிவில் தாவர இயலில் நூல்கள் மிகவும் குறைவு. இதைத் தீர்த்து வைக்கிறது இந்நூல்.

● பீர்பால் தந்திரக் கதைகள், பாலமுருகன், பக் 112, ரூ.25/- குறிஞ்சி - 20 -ஏ, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, வில்லிவாக்கம், சென்னை - 49.

பேரரசர் அக்பரைப் பற்றியும் அவரது அவையில் அறிவுக் களஞ்சியமாகத் திகழ்ந்த பீர்பாலைப் பற்றியும் எத்தனை விதமான கதைகள் பரம்பரையாக உலவி வருகின்றன என்பதை நினைக்கும்போது வியப்பாகவே உள்ளது. இந்த கம்ப்யூட்டர் அறிவியல் உலகில்கூட இன்னமும் இவை சிறுவர் விரும்பத் தக்கவையாகவே திகழ்கின்றன. மழையைப் போல, வானவில்லைப் போல, யானையைப் போல என்றென்றும் இவை சிறுவர் உலகத்தை மகிழ்விக்க வல்லவை. உயிரோட்டமுள்ள படங்கள், மனத்தை ஈர்க்கும் எளிய நடை, தரமான படைப்பு.

● ஷேக்ஸ்பியரின் நாடகக் கதைகள், ஆர். மணவாளன், பக் 140, ரூ.45, கண்ணம்மா பதிப்பகம், 92இ, புவன்கரே வீதி, உ.கீ.பாளையம், புதுவை -4.

உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் ஆங்கில இலக்கியத்தின் பொன்முடியில் பதித்த மாணிக்கங்கள். இவற்றுள் சில நாடகங்களின் சுருக்கம் புத்தகமாக வெளிவந்துள்ளது. சில பாட நூல்களிலும் சேர்க்கப்பட்டுள்ளன. வெனிஸ் வர்த்தகன், கிளியோபாட்ரா, ஜூலியஸ் சீசர் போன்ற பிரபலமானவை மட்டுமே இப்படி வெளி வந்துள்ளன. மற்றவை கல்லூரியில் படித்தவர்களிடையே மட்டும் பிரபலமாக உள்ளன. ஷேக்ஸ்பியரின் எல்லா நாடகக் கதைகளும் ஒரே நூலாக இதுவரை தொகுக்கப்படவில்லை. அந்த அரிய முயற்சியை இந்த நூலாசிரியர் செய்துள்ளார். 37 நாடகங்களின் கதை இதில் சுவை குன்றாமல் தரப்பட்டுள்ளது. ஷேக்ஸ்பியரின் நாடகப் படைப்புகளை அறிந்து கொள்ள விரும்புவோருக்கு இது புதையல்.


● பொன்மலர்க் கதைகள், குடந்தை கீதப் பிரியன், பக். 113, ரூ. 25, சுஜாதா தேவி, 281, மூன்றாவது குறுக்குத் தெரு, கண்ணப்ப நகர், திருவான்மியூர், சென்னை 600 041.

சிவாஜி, வள்ளலார், தெனாலிராமன் என்று புகழ்மிக்கோர் பலரது வாழ்க்கையிலிருந்து குட்டிக் கதைகளை மிகச் சுவையாகத் தந்துள்ளார் ஆசிரியர். படங்கள் மெருகூட்டுகின்றன. இந்த நூல் அமரர் கே.ஆர். வாசுதேவன் நினைவுப் பரிசைப் பெற்றது என்பது கூடுதல் சிறப்பாகும்.

— ரே

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. மனிதன் இதிலிருந்து தோன்றினான் (4)

7. இது கிடைக்க வேண்டும் என்றால் கேள்வி கேட்க வேண்டும் (2)

9. அந்தக் காலத்தில் அரசருக்கு எதிராக எதிரிகள் ________ ஆலோசனைகளில் ஈடுபடுவர் (2)

10. தென்னை மரத்தில் இந்தப் பூச்சி இருக்கும். மரவட்டை போல் நிறைய கால்கள் உண்டு. (3)

11. ஒலியை உணரச் செய்யும் உறுப்பு (2)

13. விக்கிரமாதித்தன் கதைகளில் முருங்கை மரம் என்றதும் இது நினைவுக்கு வரும் (4)

வலமிருந்து இடம்

3. பருப்புகளில் ஒன்று. இட்லி, தோசைக்குப் பயன்படும் (4)

4. குழந்தைகள் தினம் இவர் பிறந்த நாளில் கொண்டாடப்படுகிறது (2)

5. வில்லிலிருந்து புறப்படுவது (3)

6. பதநீர் இந்த மரத்திலிருந்து எடுக்கப்படுகிறது (2)

8. இது கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்பார்கள் (2)

14. உணவு என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)

மேலிருந்து கீழ்

1. குழந்தைகள் விஷமம் பண்ணுவதை இப்படியும் கூறலாம் (4)

2. பூச்சி இனங்களில் ஒன்று. இது கொட்டும்; மண்கூடு கட்டும் (3)

3. லட்டு ________ வடிவமானது (4)

5. ஆற்றின் குறுக்கே நீர்ப்பாசனத்திற்கு இதைக் கட்டுவார்கள் (2)

9. வடிவங்களில் ஒன்று. நான்கு பக்கங்களும் சமமாக இருக்கும் (4)

12. ஜான்சிராணி லக்ஷ்மிபாய் ________ மிக்கவர் (3)

கீழிருந்து மேல்

6. மிக உயரத்தில் வட்டமிடும் இப் பறவையின் பார்வை மிகவும் சக்தி வாய்ந்தது (4)

10. வீட்டில் திருட்டுத்தனமாகப் பால் குடிக்கும் பிராணி (2)

13. அரசனுக்கு இன்னொரு பெயர் (4)

14. அதிகாலையில் கிழக்குப் பக்கம் இவன் தோன்றுவான் (4)

விடை 58 பக்கம்

— ஆர். தங்கராஜ்,
பெரிச்சிபாளையம், திருப்பூர்.

ராமுவின்

தேவிநாச்சியப்பன்

பழைய பள்ளியில், புதிய வகுப்பு. மாணவர்கள் தங்கள் நண்பர்களோடு ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வகுப்பு ஆசிரியர் உள்ளே நுழைந்தார். மாணவர்கள் எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

ஆசிரியர் வருகைப் பதிவுசெய்தார். "மாணவர்களே, நீங்கள் உங்கள் விடுமுறையை எப்படி கழித்தீர்கள் என்பது பற்றி இரண்டு பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுங்கள். இப்போது மணி 10. 11 மணிக்கு என்னிடம் கட்டுரையைச் சேர்த்து விட வேண்டும். சிறப்பான கட்டுரையைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்குவேன்" என்றார் ஆசிரியர்.

மாணவர்கள் தாளும், பேனாவும் எடுத்துக் கொண்டு கட்டுரை எழுதத் தொடங்கினார்கள். 11 மணிக்கு ஆசிரியர் கட்டுரைத் தாள்களை வாங்கிக் கொண்டு சென்றார். மாணவர்கள் மீண்டும் பேசத் தொடங்கினர்.

சோமு வடநாட்டுச் சுற்றுப்பயணம் சென்று வந்ததை எழுதியதாகச் சொன்னான். கோபு கணிப்பொறி கற்றுக் கொண்டதை விவரித்திருந்தான். சந்திரன் இன்டர்நெட் மூலம் தெரிந்து கொண்டதைத் தெரிவிக்கும் வகையில் எழுதியிருந்தான். ரவி பாட்டியின் கிராமத்தில் பார்த்த திருவிழாவை எழுதியதாகக் கூறினான். மாணிக்கம் கோடையில் ஊட்டியின் சூழ்நிலையை அனுபவித்து மகிழ்ந்ததை விவரித்திருந்தான். ஒவ்வொருவரும் தங்கள் விடுமுறை அனுபவங்களை விவரித்துக் கொண்டிருக்கையில் ராமு மட்டும் எதுவும் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

சோமு, "என்ன ராமு, நீ விடுமுறைக்கு எங்கு போனாய்?" என்று கேட்டான். அதற்கு ராமு பதில் சொல்லும் முன்பாக கோபி, "அவன் எங்கே போவான்? அவனுக்குச் சொந்தக்காரங்களே கிடையாதே" என்றான் கேலியாக. சந்திரன், "நம்மைப் போல வசதி இருந்தாலாவது, ஏதாவது புதிதாகக் கற்றுக் கொண்டிருக்கலாம்" என்று ராமுவுக்காகப் பரிதாபப்பட்டான். "வீட்டு வேலை செய்யற





விடுமுறை

ராமுவின் அம்மாவால அவனை எங்கேயும் கூட்டிக் கொண்டு போக முடியாது" என்றான் மாணிக்கம். எல்லோரும் பேசுவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான் ராமு.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு ஆசிரியர் வகுப்புக்கு வந்தார். வருகைப்பதிவு செய்தார். பிறகு மாணவர்களிடம், "எல்லோரும் விடுமுறையைப் பயனுள்ள முறையில் தான் கழித்திருக்கிறீர்கள். பாராட்டுகள். இருந்தாலும் 42 பேருக்கும் பரிசு கொடுக்க முடியாது. எனவே சிறந்த ஒன்றைத் தேர்வு செய்துள்ளேன். உண்மையிலேயே இந்தக் கட்டுரையைப் படிக்கையில் என் உள்ளம் நெகிழ்ந்தது" என்றார் ஆசிரியர்.

எல்லா மாணவர்களும் 'யாருக்குப் பரிசு?' என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தனர். ஆசிரியர் அந்தக் கட்டுரையின் செய்தியை மாணவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்:

"நம் வகுப்பு மாணவன் ஒருவன், விடுமுறையில், நம் ஊரில் இருக்கும் ஊனமுற்றோர் இல்லத்துக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றான். அங்கே சென்றபோது கோடை வறட்சியால்

"வீட்டு வேலை செய்யற ராமுவின் அம்மாவால அவனை எங்கேயும் கூட்டிக் கொண்டு போக முடியாது"

தண்ணீர் கிடைக்காமல் ஊனமுற்ற சிறுவர்கள் படும் அவதியைக் கண்டான். அவர்களுக்காகப் பக்கத்து அடி பம்பில் இருந்த தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்தான். அவர்களுடைய துணிகளை ஊர்க்கோடியிலுள்ள குளத்திற்கு எடுத்துச் சென்று துவைத்துக் கொடுத்தான்.


"மாலை நேரத்தில் அந்தக் குழந்தைகளுக்குத் தான் படித்த நல்ல நல்ல கதைகளையும் செய்திகளையும் கூறி மகிழ்வித்தான். இத்துடன் அவனுடைய உதவி முடிந்து விடவில்லை.

"நம் ஊர் பஞ்சாயத்துத் தலைவரைச் சந்தித்து அந்த ஊனமுற்றோர் இல்லத்திற்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்குமாறு வேண்டினான். பஞ்சாயத்துத் தலைவர் "அதற்கான அதிகாரமோ, வசதியோ எனக்கு இல்லை" என்று கூறி விட்டார். அவன் சோர்ந்து விடவில்லை.

"அவனைப் பூனை சுத்திகிட்டே இருக்கே...ஏன்?"

"அவனுக்குப் பால்வடியுற முகமாச்சே!"

– தஞ்சை தாமு



"ஊரில் உள்ள வசதி படைத்த பெரிய மனிதர்களைச் சந்தித்து ஊனமுற்றோர் இல்லத்தின் அவல நிலையை விளக்கிக் கூறினான். அவனுடைய விடாமுயற்சியின் முடிவில் இரண்டு பெரிய மனிதர்களின் நன்கொடையால், ஊனமுற்றோர் இல்லக் குழந்தைகள் இன்று தண்ணீர் தட்டுப்பாடின்றி நிம்மதியாக இருக்கிறார்கள்" என்று கூறி முடித்தார் ஆசிரியர்.

கோபி எழுந்து நின்று, "ஐயா, நாங்கள் எங்கள் உண்மையான அனுபவங்களை எழுதினோம். ஆனால் நீங்கள் சொன்ன கட்டுரை நல்ல கற்பனை" என்றான். அதற்கு ஆசிரியர், "கோபி, உன்னைப் போலவே எனக்கும் இந்தச் சந்தேகம் ஏற்பட்டது. 'ஒரு சிறுவனால் இத்தகைய காரியம் செய்ய முடியுமா?' என்ற எண்ணத்தில் மதிய இடைவேளையில் நேராக அந்த ஊனமுற்றோர் பள்ளிக்கே சென்று விசாரித்தேன். சொல்லப் போனால், கட்டுரையில் அந்த மாணவன் தன்னடக்கமாகச் சிலவற்றை எழுதாமல் விட்டிருப்பது தெரிய வந்தது" என்றார்.

"யாராக இருக்கும்?" என்று மாணவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். வகுப்பறையில் ஏற்பட்ட சலசலப்பை நிறுத்திய ஆசிரியர். "அந்தப் பெருமைக்குரிய மாணவன், நம் வகுப்பைச் சேர்ந்த ராமு. அவனுக்கு நான் 200 ரூபாய் பரிசு வழங்கப் போகிறேன்" என்றார்.

மாணவர்களின் கரவொலிக்கிடையே ராமு எழுந்து நின்று நன்றி தெரிவித்தான். மேலும் அந்த 200 ரூபாயில் நல்ல புத்தகங்கள் வாங்கி, ஊனமுற்றோர் இல்லக் குழந்தைகளுக்கு ஒரு நூலகம் அமைக்க ஏற்பாடு செய்யப் போவதாகக் கூறினான். மற்ற மாணவர்களும் ராமுவோடு இணைந்து செயல்படப் போவதாகக் கூறினர்.

விடுகதைப் பக்கம்

❶ 1. நோயில்லை மருந்து கொள்வான். வாயில்லை கூச்சல் செய்வான் – அவன் பெயர்?

2. குளித்தால் கறுப்பு குளிக்கா விட்டால் சிவப்பு – அது என்ன?

3. பாடுவான், ஆடமாட்டான்; பறப்பான், நடக்க மாட்டான் – அவன் யார்?

4. உயரக் கிளையிலே உரல் கட்டித் தொங்குது – அது என்ன?

5. தாய் இனிப்பாள், தந்தை புளிப்பார், மகள் மணப்பாள் – அவர்கள் யார்?

- வே. தீபா, பத்தாம் வகுப்பு, அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி, ஆண்டிப்பட்டி.

❷ 1. சிவப்பு நிற சிங்காரிக்கு – பச்சை நிறத்தில் பரட்டைத் தலை – அவள் யார்?

2. காட்டில் வாழும் கைகாரியைத் தேடிப்பிடித்து கொல்லுகிறார்கள் – யார் அது?

3. எல்லோரும் மேலே போங்கள், நான் மட்டும் வரமாட்டேன் என்கிறான் – யாரவன்?

4. முன்னால் பிறந்தவன் கோழை, பின்னால் பிறந்தவர்கள் வீரர்கள் – யார் அவர்கள்?

5. ஊருக்கு வெளிச்சம் காட்ட தலையை கொளுத்திக் கொண்டானாம் – யார் அவன்?

- சு. செளம்யாயனி, எட்டாம் வகுப்பு, புனித அலாய்சியஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

❸ 1. காத்து நுழையாத பச்சைக் குடத்தில் தண்ணீர் நுழைஞ்சது எப்படி?

2. பெரிய தம்பி அடிக்கடி சுத்துவான்; சின்னத்தம்பி அப்பப்ப சுத்துவான் – அவர்கள் யார்?

3. எங்கேயோ அழுத்துனதுக்குச் சுட்டி தம்பி இங்கே சிணுங்குறான் – யாரவன்?

4. ஊரெல்லாம் சுத்துவான் வீட்டுக்குள் வரமாட்டான் – யார் அவன்?

5. தினமும் தேயும் இவனுக்கு ஒரு வருசம்தான் ஆயுசு – யார் அவன்?

- பெ. நடராசன், எட்டாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்.

சிவப்பு நிற சிங்காரிக்கு – பச்சை நிறத்தில் பரட்டைத் தலை – அவள் யார்?



விடைகள் :

❶ 1. பட்டாசு, 2. நெருப்பு 3. கொசு 4. பலாப்பழம் 5. பால், தயிர், நெய்.

❷ 1. காரட் 2. பேன் 3. ஏணி 4. நாக்கு, பற்கள் 5. மெழுகுவர்த்தி


❸ 1. இளநீர் 2. கடிகார முட்கள் 3. டெலிபோன் 4. செருப்பு 5. காலண்டர்


லியாண்டர் பயஸ்


கோகுலம்
போஸ்டர்
மகேஷ் பூபதி
படம் : கே.வி. ஸ்ரீனிவாஸன்

காகம் உட்கார...

ஒரு நாள் வகுப்பில் பராமரிப்பு வேலைகள் நடந்ததால் நாங்கள் அனைவரும் ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்தோம். அப்போது எங்கள் ஆசிரியர் 'காகம் உட்கார பனம்பழம் விழுந்தது' என்ற பழமொழி பற்றி விளக்கிக் கொண்டிருந்தார். அந்த மரத்தில் உட்கார்ந்திருந்த காகம் எனது தோழியின் மேல் எச்சமிட்டுவிட்டது.





தங்களுக்குக் கிடைத்த நோபல் பரிசு!

உடனே எனது தோழி ஆசிரியரை நோக்கி ''காகம் உட்கார எச்சமும் விழும்'' என்றவுடன் ஆசிரியர் உட்பட நாங்கள் அனைவரும் சிரித்து விட்டோம்!

- ப. முபீன், சேலம்

சாக்?

ஆசிரியர் போர்டில் பாடம் எழுதிக் கொண்டிருந்தார். சாக்பீஸ் தீர்ந்து விட்டதால் ஒரு மாணவனை எழுப்பி ''ஹெச்.எம்.ரூமில் சாக் வாங்கி வா'' என்று அனுப்பினார். அவன் சிறிது நேரம் கழித்து கையில் சாக்குடன் (கோணி பையுடன்) வந்து நின்றான்.

ஆசிரியர் ''அது எதுக்குடா?'' என்று கேட்க அவன், ''நீங்க தானே சார் சாக்கு கேட்டீங்க. ஹெச்.எம். ரூமில் இல்லைன்னு சொல்லிட்டதால சத்துணவு கூடத்துல இருந்து வாங்கி வந்தேன் சார்'' என்று சொல்ல, வகுப்பில் பயங்கர சிரிப்புச் சத்தம். ஆரிசியர் அவனை உட்கார வைத்துவிட்டு வேறு மாணவனை சாக்பீஸ் எடுத்து வர அனுப்பினார்.

- எம். மகேஷ், தாரமங்கலம்

பொருளாதாரம்!

இந்தியப் பொருளாதாரம் பற்றி ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அ

போது கடைசி வரிசையில் சரண்யா என்ற மாணவி தூங்கி விழுந்து கொண்டிருப் பதை பார்த்துவிட்ட ஆசிரியர் அவளை எழுப்பி "இந்தியப் பொருளாதாரம் உலக அளவில் — நிலையில் உள்ளது" என்று கோடிட்ட இடமாய் கேள்வி கேட்டார். சட் டென்று அம்மாணவி, "மோசமான நிலை யில் உள்ளது சார்" என்றாளே பார்க்கணும். எல்லோரும் சிரித்தோம். உடனே ஆசிரியர் "மோசமான நிலையில்தான் உள்ளது. அந்த மோசமான நிலை எத்தனையாவது இடம்?" என்று திரும்பவும் கேட்க "அதைச் சொல்லவே சோகமாக இருக்கு ஸார்" என் றாள். ஆசிரியர் வாய்விட்டுச் சிரித்து விட்டார். ஏனென்றால் அவள் படிப்பில் கெட்டி. சிவராத்திரி கண் விழிப்பே அவளை அசத்திவிட்டது.

- ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை



தங்கைக்காக...

எங்கள் ஆசிரியர் ஆல்ஃபிரட் நோபல் பற்றிய பாடத்தை நடத்திக் கொண்டிருந் தார். இடையில் "இந்தியாவில் முதல் நோபல் பரிசு பெற்றவர் யார்?" என்று என் தோழியிடம் கேட்டார். "தாகூர்" என்று பதிலளித்தாள் தோழி. ஆசிரியர் "எதற்காக தாகூருக்கு நோபல் பரிசு கிடைத்தது?" எனக் கேட்டார். அவள் யோசித்தாள். உடனே இன்னொரு தோழி அவளுக்கு உதவும் விதத்தில் "என் தங்கைக்காகக் கிடைத்தது" என்று மெதுவாகக் கூறினாள். உடனே அவள் கீதாஞ்சலி என்று சொல்லி உட்கார்ந்தாள்.

- நா. பாண்டியம்மாள், இராமநாதபுரம்



நீச்சல் தெரியும்!

எங்கள் அறிவியல் ஆசிரியர் செய்முறை விளக்கங்களுடன் பாடம் நடத்தக் கூடிய வர். ஒருநாள் ஒரு குடுவையில் தண்ணீ ரும், மற்றொன்றில் பாதரசமும் கொண்டு வந்தார். ஒரு இரும்புக் குண்டை நீரிலும் மற்றொரு இரும்புக் குண்டை பாதரசத் திலும் போட்டார். நீரில் போட்டது மூழ்கியது. பாதரசத்தில் போட்டது மிதந்தது. "இதிலிருந்து நீங்கள் என்ன தெரிந்து கொண்டீர் கள்?" என்று கேட்டார் ஆசிரியர். உடனே ஒரு குறும்புக்கார மாணவன், "முதல் குண்டிற்கு நீச்சல் அடிக்கத் தெரியாது என்றும் இரண்டாவது குண்டிற்கு நீச்சல் தெரியும் என்று கூறினான். அவ னது பதிலைக் கேட்டு அனை வரும் சிரித்தோம்.


- ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி,மேலச்சீத்தை.

காவேரி அம்மாளுக்கு வயது அறுபது. கடும் உழைப்பாளி தினம் விடியற்காலை எழுந்து இட்லி, தோசை, ஊத்தப்பம் போன்ற பலகாரங்கள் செய்து வியாபாரம் செய்து வந்தாள். வியாபாரம் நன்றாகவே நடந்தது. லாபமும் கிடைத்தது. பணத்தை அனாவசியமாக செலவழிக்காமல் சேர்த்து வைத்தாள். சேமித்த பணத்தை எல்லாம் தன் வீட்டிலேயே பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

அயல் ஊரிலிருந்து வந்த பக்கிரி என்ற திருடனுக்கு இந்த விஷயம் தெரிந்தது. காவேரி அம்மாளிடம் உள்ள பணத்தைக் கொள்ளை அடிக்க நினைத்தான்.

தன்னுடைய பணத்தை எல்லாம் காவேரி அம்மாள் ஒரு மஞ்சள் துணிப் பையில் கட்டி பழைய தகரப் பெட்டிக்குள் வைத்திருக்கிறாள் என்றும், படுக்கப் போகும்போது ஒரு சொம்பு நீரை அருந்திவிட்டுத்தான் படுத்துக் கொள்வாள் என்றும் தெரிந்து கொண்டான். மறுவாரமே தகுந்த ஏற்பாடுகளுடன் காவேரி அம்மாளின் சிறிய வீட்டிற்குச் சென்றான் பக்கிரி. "அம்மா! நான் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவன். வானம் இருண்டு கிடக்கு. மழை வரும் போல இருக்கு. இந்த இரவு நேரத்திலே இருட்டுலே என்னோட ஊருக்குப் போறது கஷ்டம். அதனால ராத்திரிக்கு மட்டும் இந்தத் திண்ணையிலே படுத்துக் கொண்டு சுருக்கல்லே எழுந்து கிளம்பிப் போறேன்" என்று மிகவும் பணிவோடு வேண்டினான்.

இரக்க குணம் கொண்ட காவேரி



த. ஜானகி

அம்மாளும் பக்கிரியை உண்மையான வழிப்போக்கன் என்று நினைத்து இரவு தங்க அனுமதி கொடுத்து விட்டாள்.

வழக்கம்போல சொம்பில் தண்ணீர் வைத்துக் கொண்டு பாயை விரித்தாள். இட்லி மாவிற்கு உப்பு போட்டு கரைத்து வைக்க சமையல் அறைக்குச் சென்றாள். தூங்குவதுபோல பாவனை செய்தபடி தின்ணையிலிருந்தபடி காவேரி அம்மாளைக் கவனித்துக் கொண்டிருந்தான் பக்கிரி. இது தான் தக்க தருணம் என்று நினைத்த

மஞ்சள் கறை



அவன் பூனைபோல் பதுங்கி உள்ளே நுழைந்து சொம்பு நீரில் தான் தயாராகக் கொண்டு வந்திருந்த தூக்க மருந்தைக் கலக்கினான். பழையபடி திண்ணைக்கு வந்து படுத்துக் கொண்டான்.

எதேச்சையாக சமையல் அறை ஜன்னல் வழியாகப் பார்வையை ஓட விட்ட காவேரி அம்மாள் பக்கிரியின் செய்கையை மங்கிய விடி விளக்கின் ஒளியில் கவனித்து விட்டாள். தான் குடிக்கும் நீரில் தூக்க மருந்தைக் கலந்திருக்கிறான் என்ற உண்மையையும்

உணர்ந்து கொண்டாள். தன் பணத்தை எடுத்துப் போகத்தான் வந்திருக்கிறான் என்று தெரிந்து கொண்டாள். தன்னால் இந்த இரவு நேரத்தில் ஒண்டியாக அவனை எதிர்த்துப் போராட முடியாது. எப்படியாவது தன் பணத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

சமையல் அறை வேலையை முடித்து விட்டுத் தாழ்ப்பாள் இல்லாத வாசல் கதவை சாதாரணமாகச் சாத்திவிட்டு பாயில் அமர்ந்தாள். சொம்பில் இருக்கும் நீரைக் குடிப்பதுபோல பாவனை செய்தாள். பாயில் படுத்துக் கொண்ட சிறிது நேரத்திற்கெல்லாம் குறட்டை ஒலியை எழுப்பினாள்.

''கொர்....கொர்... என்று வரும் குறட்டை ஒலியைக் கேட்டதும் பக்கிரிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. தன்னோட மயக்க மருந்து நன்றாக வேலை செய்கிறது என்று எண்ணியபடி தன் இடத்தை விட்டு எழுந்தான். மெதுவாகக் கதவை விலக்கி அந்தச் சிறிய வீட்டை ஆராய்ந்தான். ஒரு மூலையில் பழைய புடவையைப் போட்டு மூடி வைக்கப்பட்டிருந்த தகரப் பெட்டி மங்கிய விளக்கொளியில் தெரிந்தது. பெட்டிக்கு அருகில் சென்று திறந்தான். அதற்குள் இருந்த மஞ்சள் துணிப் பையை எடுத்தான். அதே மாதிரி மஞ்சள் பையில் சிறிய காகிதத் துண்டுகளை நிரப்பி, வாய்ப் பகுதியைக் கட்டித் தயாராகக் கொண்டு வந்திருந்ததைத் தகரப் பெட்டிக்குள் வைத்தான்.

காவேரி அம்மாள் குறட்டை ஒலி காதிலே ஒலிக்க பக்கிரி திண்ணைக்கு வந்தான். ஆவலை அடக்க முடியாமல் மஞ்சள் பையைத் திறந்து பார்த்தான். உள்ளே கத்தை கத்தையாக நோட்டுகளும், நாணயங்களும் இருந்ததைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். எத்தனை நேரம் அப்படியே மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தானோ அவனுக்கே தெரியாது. திடீரென்று வானம் போட்ட கர்ஜனையில் சுய உலகிற்கு வந்தான்.

'மழை வரும்போல வானம் இடிக்குது. மின்னுது. மழையில் நனைந்தால் ரூபாய் நோட்டுகள் வீணாகிப் போயிடும். தூக்கம் கண்ணைச் சொக்குது. கொஞ்ச நேரம் தூங்குவோம். விடியற்காலை காவேரி அம்மாள் எழுந்திருக்கிறதுக்கு முன்னாடி இந்த இடத்தை விட்டுப் போயிடலாம்' என்று எண்ணியபடி மஞ்சள் பையைத் தலைக்கு வைத்துக் கொண்டான். மனதிற்கு ஆனந்தமாக இருந்தது. சில நொடிகளில் தன்னையும் மறந்து தூங்கிவிட்டான்.

பக்கிரி மெய் மறந்து தூங்க ஆரம்பித்து கால் மணி நேரம் தான் ஆகியிருக்கும். அப்போது ஒருவன் அங்கு வந்தான். அவனும் திருடன் தான். மழை லேசாகத் தூற ஆரம்பிக்கவே மிக அருகில் இருந்த காவேரி அம்மாள் வீட்டிற்குள் நுழைந்தான். அந்த வீடு திறந்திருப்பதையும் இருக்கும் இரண்டு பேரும் உறங்கிக் கொண்டிருப்பதையும் பார்த்தான்.

'கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு சென்று விட வேண்டும்' என்ற எண்ணத்துடன் ஒலி எழுப்பாமல் வீட்டை ஆராய்ந்தான். பழைய புடவைக்கு அருகில் இருந்த தகரப் பெட்டியைக்


''நீ மளிகைக் கடைக்காரர் மகன் தானே?''

''ஆமாம் டீச்சர்.''

''ஒரு பொருளை ரெண்டு ரூபாய்க்கு வாங்கி ஒரு ரூபாய்க்கு விற்றால் என்ன ஆகும்?''

''எங்கப்பா கடையை மூடவேண்டியதாகும்.''

– தாரமங்கலம் மகேஷ்




கண்டுபிடித்தான். பெட்டியைத் திறந்ததும் அதற்குள் இருந்த மஞ்சள் துணிப் பை உப்பிய நிலையில் மங்கிய ஒளியில் தெரிந்தது. இந்தப் பை நிறைய பணம் காசு இருக்கிறது. அதனால்தான் பத்திரமாக இதைப் பெட்டியில் வைத்திருக்கிறார்கள் என்று நினைத்து அந்த மஞ்சள் பையை எடுத்துக் கொண்டான். நாக்கு ஒரே வறட்சியாக இருந்ததால் குடிப்பதற்கு நீர் கிடைக்குமா என்று கண்களால் துளாவியபோது காவேரி அம்மாளின் தலைமாட்டில் நீர் இருந்த சொம்பு அத்திருடனின் கண்களில் பட்டது. பூனைபோல் நடந்து சென்று தூக்க மருந்து கலந்த நீர் என்று தெரியாது சொம்பு நீரையும் ஒரே மூச்சில் குடித்து முடித்தான். மெதுவாகத் திண்ணைக்கு வருவதற்கும் மழை பெரிதாகப் பொழிய ஆரம்பிப்பதற்கும் சரியாக இருந்தது. மழையில் நனைந்து கொண்டே எங்கு செல்வது, என்று தயங்கினான். தூக்கம் கண்களை அழுத்த உடல் நிற்க மறுத்தது. மழை நின்ற உடனேயே இடத்தைக் காலி செய்து விடவேண்டும் என்று தீர்மானித்த படி பக்கிரி படுத்திருந்த இடத்திற்குச் சற்று தள்ளி படுத்துக் கொண்டான். மறு வினாடியே கும்பகர்ணனாக மாறிவிட்டான்.

வேண்டும் என்றே குறட்டை விட்ட படி தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்த காவேரி அம்மாள் நடந்தது அனைத்தையும் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள்.

'நான் பணம் போட்டிருந்த மஞ்சள் பைக்கு மேலாகத் தூக்கத்தைக் கொடுக்கக் கூடிய மூலிகைப் பொடியைத் தூவி வைத்திருந்தேன். என் பணப்பையை யார் திறந்து பார்த்தாலும் சில நொடிகளில் உறக்கம் வந்துவிடும். அதனால்தான் முதல் திருடன் என் மஞ்சள் பையைத் திறந்து பார்த்த சிறிது நேரத்திற்கெல்லாம் தூங்கி விட்டான். இரண்டாவது திருடன், தூக்க மருந்து கலந்த நீரைக் குடித்துவிட்டு அவனும் உலகத்தையே மறந்து தூங்குகிறான். நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை இந்தத் திருடர்களிடமிருந்து காப்பாற்றியாக வேண்டும்' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். படுக்கையை விட்டு எழுந்து இன்னொரு மஞ்சள் துணிப்பையை எடுத்தாள். குப்பையில் போடுவதற்காக வைத்திருந்த உடைந்த பானையின் சில்லுகளையும் காகிதத் துண்டுகளையும் பைக்குள் போட்டு பணம் போட்டு வைத்திருந்த பை மாதிரியே தயார் செய்தாள். பக்கிரியின் தலைக்கு அடியில் இருந்த பணப் பையை எடுத்துவிட்டுத் தான் தயாரித்த மஞ்சள் பையை அவன் தலைக்கு அடியில் கவனமாக வைத்தாள். பிறகு தன்னுடைய பணப்பையைத் துண்டால் சுற்றி தலையணையாக வைத்துக் கொண்டாள். மழை பலமாகப் பெய்து ஓய்ந்தது.

விடியற்காலையில் காவேரி அம்மாள் இரண்டு திருடர்களையும் எழுப்பினாள். தலைமாட்டில் இருந்த மஞ்சள் பையை காவேரி அம்மாள் பிடுங்கிக் கொண்டு விடுவாளோ என்ற அச்சத்தோடு இருவரும் மஞ்சள் பையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு எதிர் எதிர் திசைகளில் ஓட்டமும் நடையுமாகச் செல்வதைப் பார்த்ததும் அவளுக்குச் சிரிப்பு தான் வந்தது.



"ஆனி முடிந்தால் ஆடி வரும். ஆடி முடிந்தால் என்ன வரும்?"
"கால்வலி வரும் சார்."

— ஆர். தங்கராஜ்

12 # ஆளப்பிறந்தவன்!

கதை : ராஜி   படம் : லலிதா





அதோ வீரசிம்மன் தன் ஆட்களுடன் வருகிறான். நான் அவர்களுக்குப் போக்குக் காட்டிக் கொண்டிருக்கிறேன். நீ அரண்மனைக்குப் போய் உதவியுடன் ஓடி வா.
அரண்மனைக்குப் போவதற்குள் காரியம் மிஞ்சி விட்டால்...? என்ன செய்வது?
ம்... குறுக்கு வழியில் போய் இளவரசரின் கிராமத்து நண்பர்களைச் சந்தித்து அழைத்து வர வேண்டும்


லைலா கிராமத்தை அடைந்தாள்.
இளவரசருக்கு ஆபத்து. வீரசிம்மன் ஆட்கள் விரட்டிக் கொண்டு போகிறார்கள். உடனே கிளம்புங்கள்.
வீரசிம்மனும் அவன் ஆட்களும் குதிரையில் அல்லவா போகிறார்கள். நாம் எப்படி அவர்களை...?
நாம் குறுக்கு வழியில் போகலாம்...
இந்நேரம் இளவரசரைப் பிடித்திருப்பார்கள். நாம் விளையாடினோமே, அந்த வழியாகத்தான் வருவார்கள்.
உடனே கிளம்புவோம்.


இருளில் லைலாவின் திட்டப்படி மரக்கிளைகளில் கிராமத்துச் சிறுவர்கள் மறைந்துகொண்டனர்.
வீரசிம்மன் ஜெயசிம்மனைக் கயிற்றால் கட்டி அழைத்து வந்தான்.
ஆ..ஆ
இளவரசே! குதிரையை உதைத்து விரட்டுங்கள்.

(தொடரும்)

ஒரு கிராம் மண் ஐம்பது லட்சம்!



பல சங்கடங்களையும் சவால்களையும் மீறி நீல் ஆம்ஸ்ட்ராங்கும், எட்வின் அல்ட்ரினும் நிலாவுக்குப் போய், ஆராய்ச்சிக்கு அங்கிருந்து சில பாறைகளையும் பூமிக்குக் கொண்டு வந்தனர். நீல் ஆம்ஸ்ட்ராங்க்குப் பிறகு நிலாவுக்கு பத்து பேர் போய் வந்து விட்டனர். இவர்கள் அத்தனை பேரும் கொண்டு வந்த நிலா பாறையின் அளவு முந்நூற்று எண்பத்திரண்டு கிலோ ஆகும். இந்த நிலாப் பயணங்களுக்கான செலவைக் கணக்கிலெடுத்துப் பார்த்தால் நிலாவிலிருந்து ஒரு கிராம் மண் எடுத்து வர, ஐம்பது லட்சம் ரூபாய் செலவாகியுள்ளது.

— ஜெ. மகேஸ்வரன், நெய்வேலி.

சுறாமீன் எதையும் தின்னும். எவ்வளவு



கடினமான பொருளையும் ஜீரணித்து விடவும் செய்யும். அதனுடைய வயிற்றில் ஒரு திரவம் சுரக்கிறது. அதற்கு எதையும் பஸ்பமாக்கிச் செரித்துவிடும் அபார சக்தி இருக்கிறது. ஒரு சுறா மீனை வெட்டிய போது அதன் வயிற்றினுள் ஒரு குதிரை லாடம் இருந்தது. அந்த இரும்பு லாடம் ஏறக்குறைய கரையக்கூடிய நிலையில் இருந்தது. இதன் வயிற்றில் வெளியாகும் திரவம் மனிதன் மீது பட்டால் தீப்புண் போலத் தோல் வெந்துவிடும்.

— எம். ஜரினாபானு, லெட்சுமாங்குடி.

வானியல் அறிஞர் ஆரியபட்டர் கி.பி. 476ல் பிறந்தார். வானியல் சாஸ்திரத்தைப் பாடலிபுத்ரம் (பாட்னா) பல்கலைக்கழகத்தில் படித்தார். தனது வானியல் அறிவைக் கொண்டு வானியல் சாஸ்திரங்கள் பற்றிய நூல் எழுதினார். அதில் பூமி தன் அச்சில் சுழல்வதால் இரவு பகல் ஏற்படுகிறது. பூமி உருண்டையானது, சந்திரனுக்கு சுய ஒளி கிடையாது, சூரியனிடம் இருந்தே ஒளியை பெறுகிறது போன்ற அரிய தகவல்கள் பற்றி குறிப்பிட்டு இருந்தார். அந்நூலை எழுதும்



போது அவர் வயது 23தான். அவரை கௌரவிக்கும் விதமாக இந்தியா தான் அனுப்பிய முதல் செயற்கைக் கோளுக்கு 'ஆரியபட்டா' என்று பெயர் சூட்டியது.

— ஹ. அருண்குமார், இராமநாதபுரம்.

ஸ்பானிஷ் முற்றுகையின் போது டேலன் நகர மக்கள் காட்டிய வீர தீரத்திற்குப் பரிசாக அவர்களுக்கு வரிவிலக்கு அளித்தான் மன்னன் வில்லியம். ஆனால் டேலன் நகர மக்களோ தங்களுக்கு வரிச் சலுகை வேண்டாமென்றும், அதற்குப்

பதிலாக ஒரு சர்வகலா சாலையைக் கட்டித் தருமாறும் கேட்டனர். அதனை ஏற்றுக் கொண்ட மன்னன் மக்களின் அறிவு வேட்கையை எண்ணி வியந்து அவர்கள் கோரியபடி ஹாலந்தில் 'டேலன் சர்வகலா சாலை' ஒன்றைக் கட்டிக் கொடுத்தான்!


— **பி.எஸ். முருகேசன், ஈரோடு.**



சன்ட்யூ (பனித்துளி) என்ற தாவரத்தின் அறிவியல் பெயர் ட்ரோஸரா. இது ஈரக்கசிவுகள் உள்ள இடத்தில் வாழும். இது நெப்பன்திஸ் போன்று பூச்சி உண்ணும் தாவரம். இதன் இலை தடித்து காணப்படும். இதில் பிசுபிசுப்பான திரவம் சுரக்கும். இது சூரிய ஒளியில் பளபளப்பாகத் தேன் போன்று தோன்றும். தேன் என்று ஏமாந்து அமரும் பூச்சிகளை இலையில் காணப்படும் ரோமங்களைக் கொண்டு சீரணிக்க வைத்து விடுகிறது. ஒருவேளை உயிரற்ற பொருட்கள் இலையில் விழுந்தால் அவற்றை இலை ரோமங்கள் பற்றிக் கொள்வதில்லை.

— **ஹ. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப்பள்ளி, மேலச்சீதை, இராமநாதபுரம் மாவட்டம்.**

கடலில் உயிர்வாழும் ஆமை, பாம்பு இன விலங்குகளில் உப்புச் சுரப்பியின் நாளம் கண்ணின் ஓரத்தில் இருக்கின்றது. எனவே, இத்திரவம் கண்ணிலிருந்து வழிவது போல தெரியும். முதலைக்கும் இதே அமைப்புதான் உள்ளது. எனவே,



'முதலைக் கண்ணீர்!' என்ற சொற்றொடரும் உண்மை தெரியாமல் கூறப்படுவதாகும். தான் உண்ணும் உணவு, நீர் இவற்றில் உள்ள அதிகப்படியான உப்பைத்தான் முதலை, உப்புச் சுரப்பி மூலம் வடிகட்டி, கண்ணின் வழியாக வெளியேற்றி விடுகின்றது.

— **ஏ.எல். பாத்திமா, காரைக்கால்.**

எழுதும்போது பெரும்பாலானோர்



வலதுகையைப் பயன்படுத்துவார்கள். சிலர் இடது கைப்பழக்கம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். எந்தக் கை பழக்கமோ அந்தக் கையால் எழுத பிள்ளைகளுக்குப் பயிற்சியளிப்பார்கள். இரண்டு கைகளாலும் எழுதுவது என்பது சற்றுச் சிரமமான காரியமே. ஆனால் ஜப்பான் நாட்டுப் பள்ளிகளில் இரண்டு கைகளாலும் எழுதப் பழக்குகிறார்கள்.

— **பாளை பசும்பொன்**

எல்லா பறவைகளுமே ஆண்டுக்கு ஒரு முறை தங்களது இறகுகளைக் கழித்து விடுகின்றன. பழைய இறகுகள் போய் புதிய இறகுகள் முளைக்கும் வரை அவை வெளியே எங்கும் செல்லாது மறைந்தே இருக்கின்றன. புதிய இறகுகள் முளைத்தவுடன் வெளி உலகத்திற்கு வந்து விடுகின்றன. இப்படி இறகுகளைப் புதுப்பித்துக் கொள்ளாவிடில் அப் பறவையால் பறக்க முடியாமலேயே போய் விடும். ஒரு சில பறவைகள் மட்டும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இறகுகளை உதிர்க்கின்றன.

— **ராமகிருஷ்ணன், புதுக்கோட்டை.**

பண்டைய ரோமானியர்கள், தங்கள் வீடுகளில் ஒரு குழந்தை பிறந்தால் மதிப்பு வாய்ந்த ஒரு உலோகத் துண்டினை ஜூனோ தேவதைக்கு அதன் ஆலயத்தில் அர்ப்பணிப்பது வழக்கம். தேவதையின் முழுப் பெயர் ஜூனோ மானிடா. இந்த தேவதைக்கு அர்ப்பணிக்கப்படும் உலோ



கத் துண்டுகளே 'மானி' என்று வழங்கப்பட்டன. இந்தத் துண்டுகள், நெருக்கடி காலத்தில் நாணயங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. மானி, பிறகு மனியாகி விட்டது. இப்போது புழக்கத்திலிருக்கும் பணத்தையும் 'மனி' என்று அழைக்கும் முறை இப்படி வந்ததுதான்.

— **கோபி. ஜி.கே.எஸ். பரிமளா,**
கோபிசெட்டிப்பாளையம்.

ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதிலும் 5 லட்சம் லேசான மற்றும் பலமான நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. இதை லட்சத்திற்கும் மேற்பட்டோர் உணர்கின்றனர். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிர் இழக்கின்றனர், அல்லது காயமடைகின்றனர். நில நடுக்கத்தை அளக்க உதவும் 'ரிக்டெர்' அளவுகோலை டாக்டர் சார்லஸ் ரிக்டெர் என்பவர் 1954ம் ஆண்டு கண்டுபிடித்தார்.

— **பாரதிசெல்வம்,**
சென்னை.



1865ஆம் ஆண்டு எட்வர்ட் டிலா போலே என்ற பிரஞ்சுக்காரர் சுதந்திரதேவி சிலையை அமைக்க ஆலோசனை தந்தார். இந்த சிலையை ஃபிரெஞ்ச் மக்கள் அமெரிக்க சுதந்திரத்திற்கு ஞாபகார்த்தமாகவும் அமெரிக்காவுக்கும் ஃபிரான்ஸ் நாட்டுக்கும் இடையே நட்புணர்வுக்காகவும் கொடுக்கத் திட்டமிட்டார்கள். இந்தச் செலவுக்கான பணம் சேகரிக்க 1875ஆம் ஆண்டு பிரான்கோ அமெரிக்க யூனியன் அமைக்கப்பட்டது. 1885ஆம் ஆண்டு சிறுசிறு பகுதிகளாக இந்தச் சிலை வடிக்கப்பட்டு 214 பெட்டிகளில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டது. பீடம் அமைக்க அமெரிக்காவில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு பணம் வசூலிக்கப்பட்டது. ஆனால் 1884ம் ஆண்டு வரை போதுமான பணம் வசூலாகவில்லை. சிலையின் பாகங்கள் அமெரிக்கா வந்து சேர்ந்து இரண்டு மாதங்கள் கழிந்த பிறகே தேவையான பணம் சேர்ந்தது. 1886 ஆம் ஆண்டு அக்டோபர் 26ம் தேதி ஜனாதிபதி குரோவர் கிளீவ்லேண்ட் சிலையைத் திறந்து வைத்தார். இந்தச் சிலை லிபர்ட்டி தீவில் நியூயார்க் துறைமுகம் அருகில் உள்ளது.



— **ஆர். ஏ.**
ஜெயந்த் பாலாஜி,
செட்டிபாளையம்.

பீல்ட் மார்ஷல் நிக்கோலஸ் அகஸ்டி என்பவர் நூற்றுக்கணக்கான போர்களில் பங்குகொண்டு தம் வீரத்தை நிலைநாட்டியவர். இவரது காலம் 1646 முதல் 1715 வரை. ஒருமுறை நண்பர்களுடன் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது மேஜை மேல் இருந்த உப்புக் கிண்ணம் கைபட்டு தவறி விழுந்து உப்பு சிந்தி விட்டது. இதைப் பெரும் அபசகுனமாகக் கருதிய நிகோலஸ் அந்த அதிர்ச்சியிலேயே இறந்து விட்டார்!

— **ஜி.கே.எஸ். மூர்த்தி,**
கோபிசெட்டிபாளையம்.



கல்கி சந்தா செலுத்தினால் கோகுலம்/GOKULAM இலவசம்!

* உங்கள் குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள்.

* கோகுலம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கச் செய்யுங்கள்.

* கல்கி வார இதழுக்கு ஓராண்டு சந்தா ரூ.275/- செலுத்தினால் போதும்; ரூ.36/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஆறு மாதங்களுக்கு (ஆறு இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக வந்து சேரும்.

* கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தா ரூ.550/- செலுத்தினால் ரூ.72/- பெறுமானமுள்ள தமிழ் அல்லது ஆங்கில கோகுலம் ஓராண்டுக்கு (12 இதழ்கள்) உங்கள் குழந்தை பெயருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

* ஏற்கெனவே சந்தாதாரர்களாக உள்ளவரும் தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொண்டு பயன்பெறலாம். சந்தா முடிவு தேதி நீடிக்கப்படும்.

* கல்கி என்ற பெயருக்கு மணி ஆர்டர் அல்லது டிமாண்ட் டிராஃப்ட் அனுப்பவும். வெளியூர் காசோலைகள் ஏற்பதற்கில்லை.

டி.டி. அல்லது எம்.ஓ. அனுப்ப முகவரி :
மானேஜர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

என் பெயர் : ....

என் மகன் / மகள் பெயர் : ....

....

விலாசம் : ....

....

....

....

கல்கி வார இதழுக்கு ஓராண்டு / இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ. .... அனுப்பியுள்ளேன். என் மகன் / மகள் பெயருக்கு கோகுலம் தமிழ் / ஆங்கிலம் 6/12 இதழ்கள் * அன்பளிப்பாக அனுப்பவும்.

* தேவையற்றதை அடித்து விடவும்.

கையொப்பம் : ....

ஜூலை இறுதி வரை மட்டுமே இந்தச் சலுகை! முந்துங்கள்!



புதிர் உலகம்

I. உங்கள் நண்பரை நோக்கி ஒரு எளிமையான கணக்கின் மூலம் நினைத்த எண்ணையும் அவரது, வயதையும் கூறிவிடுகிறேன் என்று சொல்லுங்கள்.

ஒன்றிலிருந்து பத்துக்குள் ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். அந்த எண்ணை 2ஆல் பெருக்கச் சொல்லுங்கள். வந்த எண்ணுடன் 5ஐ கூட்டச் சொல்லுங்கள். இப்போது 50ஆல் பெருக்கச் சொல்லுங்கள். அவர் நினைத்த எண் 8 என வைத்துக் கொள்வோம்.

8 x 2 = 16

16 + 5 = 21

21 x 50 = 1050

என வரும் இந்த 1050 உடன் 1751ஐ கூட்டவும்.

1050 + 1751 = 2801 என வரும். அவருடைய பிறந்த வருடத்தைக் கழிக்கச் சொல்லவும். அவர் பிறந்த வருடம் 1987 என வைத்துக் கொள்வோம்.

2801 - 1987 = 814

இப்போது மீதி 814 என வரும். இதில் முதல் எண்ணான 8 அவர் நினைத்த எண். 14 அவருடைய வயது. இவ்வாறு கூறி அவரை அசத்தலாம்.

முதலில் வந்த 1751 என்பது 2001க்கு மட்டுமே பொருந்தும். 2002க்கு 1752, 2003க்கு 1753.

இந்த எளிய கணக்கைப் பயன்படுத்தி அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்துங்கள்.

- ப.ஆ. ஹேமநாதன், சென்னை


II. தெற்கு வடக்காகக் கட்டப்பட்ட ஆறடி உயரமுள்ள மதிலின் மீது ஒரு சேவல் அமர்ந்துள்ளது. அதன் தலை கிழக்கு நோக்கியும் பின் பகுதி மேற்கு நோக்கியும் உள்ளது. அது இடும் முட்டை, எந்தப் பக்கம் விழும்?

- ஏ.எல். பாத்திமா, காரைக்கால்

III. ஒருவர் 1750 ரூபாய் கொடுத்து மூன்று டி-சர்ட்டுகளை வாங்கினார். இதில் இரண்டாவது டி-சர்ட், முதல் டி-சர்ட்டைவிட 50 ரூபாய் அதிகம். மூன்றாவது டி-சர்ட் இரண்டாவது டி-சர்ட்டை விட 600 ரூபாய் குறைவு. அப் படியென்றால் மூன்று டி-சர்ட்டுகளின் விலைகள் என்ன?

- எம்.வினோத், விருதாச்சலம்

IV. அ, லை, ரை, ண், மா, ச, தி, பி, க, யி, ம், று, ணை - இந்த எழுத்துக்களைக் கட்டங்களில் பொருத்தமாக நிரப்புங்கள்




பார்க்கலாம். 7 வார்த்தைகள் கிடைக்கும்.

- த. மணிக்கலா, நீடாமங்கலம்

V. ஒரு மாயக் குளத்தில் ஒவ்வொரு பூவும் ஒரு நிமிடத்தில் இரண்டு மடங்காகிறது. அந்தக் குளத்தின் கால் பகுதி நிரம்ப 8 நிமிடங்கள் ஆகின்றன எனில் முழுவதும் பூவால் நிரம்ப மொத்தம் எத்தனை நிமிடங்கள் ஆகும்?

- நா. பாண்டியம்மாள், ஒன்பதாம் வகுப்பு, சேதுமாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை, இராமநாதபுரம்

விடைகள் 74ஆம் பக்கம்




• ஜெனிஃபர்

விளையாட்டு அரங்கம்

ஃபிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்ற ஃபிரெஞ்ச் ஒபன் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் — மகேஷ் பூபதி ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது. இறுதி ஆட்டத்தில் இந்த ஜோடி செக்கோஸ்லோ வாகியாவின் பீட்டர் பாலா, பாவெல்விஸ்னர் ஜோடியுடன் மோதியது. 7—6, 6—3 என்ற செட் கணக்கில் இந்திய ஜோடி சுலபமாக வெற்றி பெற்றது.

பயஸ் — பூபதி ஃபிரெஞ்ச் ஒபன் பட்டம் வெல்வது இது இரண்டாவது முறை. 1999 ஆம் ஆண்டு இரட்டையர் பட்டத்தை இந்த ஜோடி ஏற்கெனவே பெற்றிருக்கிறது. இந்த சாம்பியன்களின் போஸ்டர் 40 ஆம் பக்கத்தில் உங்களுக்காக.



• பூபதி



• பயஸ்



• ஹம்பி


மீண்டும் வாகை சூடிய சாம்பியன்கள்!

மகளிர் ஒற்றையர் போட்டியின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் ஜெனிஃபர் கேப்ரியாட்டியும் பெல்ஜியத்தின் கிம்கிளிஸ்டர்ஸும் மோதினர். ஃபிரெஞ்ச் ஒபனில் விளையாடும் முதல் பெல்ஜிய வீராங்கனையான 18 வயது கிளிஸ்டர்ஸ் அபாரமாக முதல் செட்டை ஆடினார். அடுத்து வந்த இரண்டு செட்களில் ஜெனிஃபர் திறமையாக ஆடி பட்டத்தைக் கைப்பற்றினார். இந்த ஆண்டு ஆஸ்திரேலிய ஒபன் பட்டத்தை வென்ற கேப்ரியாட்டிக்கு இது இரண்டாவது பட்டம்.

கிரிக்கெட்

இந்தியா — ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையே இரண்டு டெஸ்ட் கொண்ட தொடர் நடைபெற்றது. இதில் முதல் டெஸ்ட்டில் 8 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது. இந்திய அணி வெளிநாட்டில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி 15 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் இம் முறையாவது தொடரைக் கைப்பற்றுவார்களா என்று ரசிகர்கள் ஆர்வத்துடன் 2வது டெஸ்டை எதிர்பார்த்தனர். ஆனால் இரண்டாவது

குறுக்கெழுத்துப் புதிர்விடை



டெஸ்டில் 4 விக்கெட் வித்தியாசத்தில் ஜிம் பாப்வே வெற்றி பெற்றது. இதனால் ஆட்டம் 1 : 1 என்ற சமநிலைக்கு வந்து விட்டது.

முத்தரப்பு கிரிக்கெட்

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், ஜிம் பாப்வே ஆகிய மூன்று நாடுகள் பங்குபெறும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் ஜிம்பாப்வேயில் நடைபெற்றன.

இதில் இந்தியாவும் ஜிம்பாப்வேயும் மோதிய முதல் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டெண்டுல்கர் 70 ரன்களும் ஹேமங்பதானி 52 ரன்களும் குவித்தனர். இவ்விரு நாடுகளுக்கு இடையிலும் நடைபெற்ற இரண்டாவது ஒரு தினப் போட்டியிலும் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஜிம்பாப்வேயும் மேற்கிந்தியத் தீவுகளும் மோதிய போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றுள்ளது. இறுதிப் போட்டிக்கு இந்தியாவும் மேற்கிந்தியத் தீவுகளும் மோதியபோது மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுவிட்டது. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பதுபோல் ஆகிவிட்டது இந்தியாவின் நிலை.

கிராண்ட் மாஸ்டர் ஹம்பி

ஆந்திரத்தில் உள்ள விஜயவாடாவைச் சேர்ந்தவர் கோனேரு ஹம்பி. இவர் 1997 ஆம் ஆண்டு ஃபிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற 10 வயதுக்குட்பட்டோருக்கான உலக செஸ் போட்டியில் சாம்பியன் ஆனார். இந்த ஆண்டு ஜூன் மாதம் ஹங்கேரியில் நடந்த சர்வதேச செஸ் போட்டியில் வெற்றி பெற்று கிராண்ட் மாஸ்டர் ஆனார் ஹம்பி. இவர் இந்தியாவின் இரண்டாவது பெண் கிராண்ட் மாஸ்டர் ஆவார். முதல் பெண் கிராண்ட் மாஸ்டர் தமிழ்நாட்டைச் சேர்ந்த எஸ். விஜய லக்ஷ்மி.

இரண்டாவது இந்திய வீரர்

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன் குவித்த இரண்டாவது இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர். ஜிம்பாப்வேயில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் 6919 ரன்கள் சேர்த்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். ஏற்கெனவே இரண்டாவது இடத்தில் இருந்த திலீப் வெங்சர்க்கார் மூன்றாவது இடத்திற்குச் சென்று விட்டார். முதல் இடத்தில் இருப்பவர் சுனில் கவாஸ்கர். இவர் 10,122 ரன்கள் குவித்துள்ளார். உலக அளவில் ஆலன் பார்டர் 11,174 ரன்கள் எடுத்து முதல் இடத்திலும், கவாஸ்கர் இரண்டாவது இடத்திலும் உள்ளனர். சச்சினுக்கு 23வது இடம்.



திடீரென்று தோன்றும்

நீங்கள் ஏற்கெனவே இரவு வானை ரசித்து பார்ப்பவர்தான் என்பது தெரியும். எப்படி என்கிறீர்களா? 'நிலா...நிலா...ஓடி வா!' பாடல் உங்களுக்கு எப்போதிலிருந்து தெரியுமோ, அப்போதிலிருந்தே நீங்கள் இரவு வானுக்கு அறிமுகமாகிவிட்டீர்கள்!

முழுநிலா, தேய்பிறை, வளர்பிறை என நிலவின் பல முகங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். உண்மையில் நிலா தன் உருவத்தை ஒரு போதும் மாற்றிக் கொள்வதில்லை. நிலா பூமியைச் சுற்றி வரும்போது, அதன் மீது சூரியக்கதிர்கள் பட்டு பிரதிபலிக்கின்றன. அதனாலேயே நிலாவை நாம் விதவிதமாய்ப் பார்க்க முடிகிறது.


நீங்கள் இருட்டான இரவு நேரத்தில் தெள்ளத் தெளிவாய் புலப்படும் இரவுவானைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். திடீரென்று பிரகாசமான ஒரு ஒளிக்கீற்று... சிறிது நேரத்திலேயே மறைந்து போகிறது. ஒரு நட்சத்திரம் விழுந்து விட்டதோ? அது என்ன என்று அந்தக் கால வானவியலாளர்கள் மண்டையைக் குடைந்தார்கள்; கண்டு பிடித்தார்கள். அதுதான் விண்கல் (meteors).



• எரிகல்

விண்வெளியில் உள்ள மாசுகள் பூமியின் வளிமண்டலத்தில் மோதும் போது தோன்றும் ஒளியைத்தான் நீங்கள் பார்த்தீர்கள். பூமியின் சுற்றுப்பாதையில் மில்லியன் கணக்கான கல் அல்லது இரும்பு **meteoroids** என்ற பெயரில் இருக்கின்றன. எப்போதாவது ஒரு பாறை நமது வளிமண்டலத்தோடு உரசிவிடுவதுண்டு. அப்போது காற்றுடன் ஏற்படும் உராய்வு காரணமாக ஆயிரக்கணக்கான டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் ஏற்படுகிறது. அதனால் அந்தப் பாறையில் தீ பற்றிக் கொள்கிறது. இதுதான் விண்கல். சிலர்

• நியூயார்க் மியூசியத்தில் உள்ள எரிகல்



ஒளிக்கீற்று!




• எரிகல் மழை

நினைப்பது போல இது நட்சத்திரமல்ல. இவை எரியும் போது பிரகாசமாகவும் வண்ணமயமாகவும் இருக்கும். அதைப் பார்ப்பது கண்கொள்ளாக்காட்சி!

பெரும்பாலான எரிகற்கள் மிகச்சிறியவை. அவை வளிமண்டலத்திலேயே எரிந்து காணாமல் போய்விடுகின்றன. ஆனால் அரிதாக மிகப்பெரிய எரிகற்கள் தரையில் வந்து விழுவதுண்டு. அப்படி கண்டெடுக்கப்பட்ட கற்களை மியூசியங்களில் நீங்கள் பார்க்கலாம். பெரிய கற்கள் விரைந்து வந்து பூமியில் விழுந்தால் என்ன ஆகும்? பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படுமில்லையா? அமெரிக்காவில் உள்ள வடக்கு அரிசோனாவில் 50,000 வருடங்களுக்கு முன் அப்படி ஒரு கல் விழுந்தது. அந்தக் கல் மிகமிகப் பெரிய பள்ளத்தை அந்த இடத்தில் உருவாக்கிவிட்டது. அதன் அகலம் 4,000 அடி; ஆழம் 570 அடி! நல்ல வேளையாக இப்படிப்பட்ட கற்கள் அடிக்கடி விழுவதில்லை. நம் மூதாதையர் இவற்றை 'சொர்க்கத்திலிருந்து விழுந்த கல்' என்று எண்ணி வழிபட்டார்கள்.

• அரிசோனா பள்ளம்



1966நவம்பர் 17 அன்று ஒரு 'எரிகல் மழை' பொழிந்தது. அது ஒரு அபூர்வக்காட்சி. ஒரே சமயத்தில் 2000க்கும் மேற்பட்ட சிறுசிறு விண் கற்கள் எரியும் காட்சி எவ்வளவு பிரமாதமாய் இருக்கும்! கற்பனை செய்து பாருங்கள். விண்மீன்கள், விண்கற்கள், சூரியோதயம், அஸ்தமனம், நிலா என விதவிதமான காட்சிகளை வானோக்கலில் நீங்கள் பார்த்து மகிழலாம். செலவு பிடிக்காத சூப்பர் பொழுதுபோக்கு இது!


— பூமா

காளியோடு கங்கையில் கலந்தவர்!

கொல்கத்தா விலிருந்து முப்பது மைல் தூரத்தில் இருந்தது கும்ஹார் கட்டா என்ற கிராமம். அங்கே ஆயூர் வேத வைத்தியராக இருந்த ராம் ராம் ஸென்னுக்கும் அவரது இரண்டாவது மனைவியான சித்தேஸ்வரிக்கும் பிறந்தவர் ராமப்பிரசாத்.

தந்தையிடம் ஆயுர்வேதமும் சம்ஸ் கிருதமும் படித்தார். உருதும், பாரசீகமும் பயின்றார். ஸரவாணி என்ற அழகிய பெண்ணை அவருக்கு மணமுடித்தனர். நான்கு குழந்தைகள் பிறந்தனர்.

கொல்கத்தா நகரில் வேலை தேடி தெருத்தெருவாக அலைந்தார் ராமப் பிரசாத்.



ஒருநாள் காளி கோவிலில் "தாயே! குடும்பத்தைக் காப் பாற்றும் கட்டாயத்தில் அலையு வைக்கிறாயே! இது நியாயமா? என் பாட்டும் பக்தி யும் உனக்கு வெறுத்துவிட்டதா?" என்று முறையிட்டார்.

அருகில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த துர்க்கா சரண் மித்ரா என்ற முதலாளி ராமப்பிரசாதிடம், "நீங் கள் என்ன படித்திருக்கிறீர்கள்? உங்கள் பெயரென்ன? உங்களுக்கு என்ன வேலை செய்யத் தெரியும்? குடும்பத்தில் எத் தனை பேர்?" என்ற விபரங்களை விசாரித்தார்.

தகவல்கள் அவருக்குத் திருப்தி யளிக்கவே அவருடைய அலுவலகத் தில் கணக்கெழுதும் வேலையில் நிய மித்தார். சம்பளம் முப்பது ரூபாய்! 200 ஆண்டுகளுக்கு முன் இது உயர்ந்த சம்பளம்.

'காளிதேவியின் அருள்' என்று குடும் பத்தினர் மகிழ்ந்தனர். ஒருநாள் இவர் கணக்குப் புத்தகத்தில் கவிதை எழுதிக் கொண் டிருப்பதைக் கண்ட மேற்பார்வையாளர் முதலாளி மித்ராவிடம்

புகார் செய்தார்.

கணக்குப் புத்தகத்தை வரவழைத்துப் பார்த்த மித்ராவின் கண்களில் கண்ணீர் பெருகியது.

''கவிஞனைக் கணக்கெழுதச் சொன்னது என் குற்றம். ராமப்பிரசாத்! நீங்கள் நாளையிலிருந்து அலுவலகம் வர வேண்டாம். கவிஞருக்கு என் காணிக்கையாகச் சம்பளம் மாதந்தோறும் வீடு தேடி வரும்'' என்று கூறி ஏராளமான பரிசுகளையும் கொடுத்தனுப்பினார்.

இதைக் கேட்டு அவரது தாயும், மனைவியும் பிரமித்தனர். ஸரவாணியிடம் குடும்பப் பொறுப்பை விட்டார். கழுத்தளவு கங்கை நீரில் நின்று பக்தி மழை பொழிவார். இதயத்தை உருக்கிய அந்தப் பாடல்கள் 'ஹிருதய சங்கா' என்று மக்களால் போற்றப்பட்டது.

ஒருநாள் ஸாலிஸஹர் மன்னனான கிருஷ்ணசந்தர் கங்கையில் படகில் வரும்போது இவரது பாடல்களைக் கேட்டு மெய் மறந்தார்.


மறுநாள் அமைச்சர் பட்டாடைகளும், வெகுமதிகளும் சுமந்து வந்து, ''நீரில் பாடுவதை அரசவையில் பாடும்படி அரசரின் வேண்டுகோள்'' என்று கூறினார்.

''இதையெல்லாம் தந்து என்னைக் கடனாளி ஆக்காதீர்கள். காளிமாதாவின் பிரசாதம் நான் பாடுவது. அது மலையருவி. அது மனிதருக்குச் சொந்தமல்ல'' என்று திருப்பி அனுப்பி விட்டார்.

மறுநாள் மன்னரே அவற்றை எடுத்து வந்து ஏற்றுக் கொள்ளும்படி இறைஞ்சினார்.

''மலை அருவியில் நீராட மலைமகள் மறுப்புச் சொல்ல மாட்டாள். காளி மாதா இந்தக் காணிக்கையை என் மூலமாகத் தங்

ஆர். பொன்னம்மாள்



களுக்குத் தர விரும்புகின்றாள்'' என்றார்.

ராமப்பிரசாத் மன்னரின் அன்புக்குக் கட்டுப்பட்டார். மன்னரும் ஏராளமான நிலங்களை அவர் குடும்பத்துக்கு எழுதி வைத்தார்.

கிருஷ்ண சந்தரும். ராமபிரசாதும் ஆப்த நண்பர்களானார்கள்.

ஒருநாள் ஒரு மங்கை வந்து, ''ஒரு பாட்டுப் பாடுங்கள்'' என்று கேட்டாள். பலர் இப்படி ராமப்பிரசாதிடம் கேட்பதுண்டு.

ராமப்பிரசாத் வேலை மும்முரத்தில் ''இப்போது களைப்பாயிருக்கிறது. அப்புறம் வா. பாடிக் காட்டுகிறேன்'' என்றார் அப்புறம் அந்தப் பெண் வரவில்லை.

மாலையில் நீராடி தியானம் செய்ய பூஜைக்குச் சென்றார். அங்கே சுவரில் 'காசியிலிருந்து உன் பாட்டைக் கேட்க ஓடி வந்தேன். களைப்பாயிருக்கிறதென்று பாட மறுத்து விட்டாய்! உனக்கு நேரம் கிடைக்கும்போது காசிக்கு வந்து பாடு' என்று எழுதியிருந்தது.

அப்போதே காசிக்குப் பயணமானார். பாதி வழி போயிருப்பார். இருள் கவியத் தொடங்கியது. ஒரு பெரிய ஆலமரத் தடியில் படுத்து உறங்கினார். கனவில் வந்த அன்னபூரணி, ''மகனே! நீ பாதி தூரம் வந்தாய்! நான் பாதி தூரம் வந்து விட்டேன். இங்கேயே பாடு'' என்றாள்.

எழுந்து உட்கார்ந்து பாடினார். அந்த அற்புதமான கீதங்களை அன்னை கேட்பதை அவர் உணர்ந்தார். காட்டுவாசிகளும், அருகிலிருந்த கிராமத்து ஜனங்களும் கூடி இசையை ரசித்தனர்.


ஊர் ஊராக நடந்தே ஸ்தலங்களைத் தரிசித்தார். வங்காளம் பஞ்சத்தில் தவித்த போது அன்னபூரணியை நினைத்துப் பாடுவார். எங்காவது ஒரு செல்வந்தர் அன்ன தானம் செய்யப் போவதாக அறிவிப்பார். இல்லையேல் மழை பொழியும்.

மன்னன் கிருஷ்ண சந்திரன் மரணப் படுக்கையில் இருப்பதாகத் தகவல் வந்ததும் ஸாலிஸஹருக்கு விரைந்தார். அவருடைய பக்திப் பாடல்களை ரசித்தபடியே மன்னர் உயிர் பிரிந்தது.

தீபாவளி தோறும் களிமண்ணால் தன் கைப்பட காளி சிலை செய்வார். நரக சதுர்த்தசியன்று இரவு முழுவதும் ஆடிப் பாடி பஜனை செய்வார். பூஜையைக் காண பெருமளவில் பக்தர்கள் கூடுவார்கள். மறுநாள் காலை காளி மாதாவுடன் கங்கையில் மூழ்கி நீராடுவார். எழுந்திருக்கும்போது தலையிலுள்ள காளி மாதா கங்கை நீரோடு கலந்திருப்பாள்.

ஒரு தீபாவளியன்று ராமபிரசாத் காளியோடு தானும் கங்கையில் ஐக்கியமானார். மூழ்கி குளித்தவரின் தலை நீருக்கு வெளியே வரவேயில்லை.


கரையிலிருந்து பக்தர்கள் கண்ணீர் விட்டுக் கதறினர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ராமப்பிரசாதின் பக்திப் பாடல்களால் ஈர்க்கப்பட்டுத்தான் காளி மாதாவின் தீவிர பக்தரானார்.





பன்றிக் குட்டியைக் காப்பாற்றிய குள்ளன்


மோஹன்,
அஜயன்


ஜெர்மன் நாட்டுபுறக்கதை










திருடன் மரத்தடியில் மூட்டையை வைத்துவிட்டு உட்கார்ந்தபடி தூங்கினான். மரத்தடிக்குப் பக்கத்தில் இருந்த குள்ளனுக்குப் பன்றிக் குட்டியின் அழுகுரல் கேட்டது.
க்கிக்கிக்கி... க்கிக்கி...
என்ன சத்தம் அது?
இந்த மூட்டையிலிருந்து தான் சத்தம் வருது.
குள்ளன் கோணியில் உள்ள ஓட்டையின் வழியே பார்த்தான்.
ஐயோ! ஒரு பன்றிக் குட்டி!
ஏய், பன்றிக் குட்டியே! உள்ளே என்ன பண்ணறே?
உனக்கு என் பாஷை தெரியுமா?


இந்தத் திருடன் ஏழை விவசாயி வீட்டிலிருந்து என்னைத் தூக்கிட்டு வந்துட்டான். காப்பாற்று.
நான் ஒரு திட்டம் வச்சிருக்கேன். நீ கிளம்பு.
பன்றிக்குட்டியை வெளியேற்றிவிட்டு, குள்ளன் கோணிக்குள் புகுந்து கொண்டான்.
களைப்பு நீங்கிய திருடன் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.
சந்தை முடியறதுக்குள்ளே சீக்கிரம் போய்ச் சேரணும்.
அந்த நேரம் மற்றொரு குள்ளன் அந்தப்பக்கம் வந்தான்.
என் அண்ணன் இங்குதானே இருந்தான். எங்கே காணோம்?


இரண்டாவது குள்ளன் ஒவ்வொரு இடமாகத் தேடிக் கொண்டு வந்தான்.
அண்ணா, அண்ணா! எங்கே இருக்க நீ?
நான் இந்தத் திருடனின் முதுகில் உள்ள கோணிக்குள் இருக்கேன்.
கோணிக்குள் யாரோ பேசற சத்தம் கேட்குதே...
யாரு?... உள்ளே இருக்கிறது யாரு?


நான்... நான்
பன்றிக்குட்டி.
இல்ல, பொய்.
நீ என்னைத் திருடி, சந்தையில் விற்கப் போறே. இந்த விஷயத்தை எல்லோரிடமும் சொல்லப்போறேன்.
ஐயோ! பன்றிப் பிசாசு!
© 2001 MALAY FEATURES WORLD RIGHTS RESERVED
ஹா....ஹா....
இனிமேல் ஒரு நாளும் திருட மாட்டான்.
பேய்! ஐயோ பிசாசு! யாராவது காப்பாற்றுங்க!

மரியாதைக்குப் போராடியவர்!



• ஐன்ஸ்டீன்

ஆப்பிள்?

ஒருமுறை விஞ்ஞானி ஐன்ஸ்டீன் வாக்கிங் போய்க் கொண்டிருந்தார். வழியெங்கும் ஆப்பிள் மரங்கள் இருந்தன. ஒரு மரத்தில் மட்டும் பழங்களே இல்லை. வியப்படைந்த ஐன்ஸ்டீன் அருகில் மாடுமேய்த்துக் கொண்டிருந்த சிறுவனை அழைத்து, "ஏன் அந்த மரத்தில் மட்டும் ஆப்பிள் பழம் பழுக்கவில்லை?" என்று கேட்டார். சிறுவன் அவரைப் பார்த்து தயங்கினான். விஞ்ஞானி சிறுவன் கையில் ஐந்து டாலர் கொடுத்து மீண்டும் கேட்டார். சிறுவன் மீண்டும் தயங்கினான். விஞ்ஞானியால் ஆர்வத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. மேலும் பத்து டாலர் கொடுத்து, "ஏன் அந்த மரத்தில் ஆப்பிள் பழம் இல்லை?" என்று கேட்டார். பணத்தைக் கையில் வாங்கிக் கொண்ட சிறுவன், "ஏனென்றல் அது ஆப்பிள் மரம் அல்ல. பைன் மரம்" என்று சொல்லிவிட்டு ஓட்டம் எடுத்தான்.

- ஆர்.ஏ.ஜெயந்த் பாலாஜி, ஸ்ரீ சக்தி மெட்ரிக் பள்ளி, செட்டிபாளையம்.

சாதனை படைத்த சர்ச்சில்!

வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்களும் துயரங்களும் வந்தபோதும், அவற்றை ஒரு பொருட்டாக எண்ணி சோர்ந்து விடாமல், துடிப்புடன் செயலாற்றி சாதனை படைத்தவர் சர்ச்சில். அவர் ஏழாவது வயதில் பள்ளியில் சேர்ந்தார். அவர் சரியாகப் படிக்காத காரணத்தினால் ஆசிரியர் அவரை அடிக்காத நாளே இல்லை. ஒரு முறை அவர் ஆசிரியரிடம் வாங்கிய பிரம்படியால் நிமோனியா காய்ச்சலே வந்து, செத்துப் பிழைத்தார்.

பதினெட்டாவது வயதில் பாலம் ஒன்றில் தலைக்குப்புற விழுந்து தலையில் அடிபட்டு, மூன்று நாட்கள் மயக்கமாகக் கிடந்தார்.

இருபத்து நான்காம் வயதில் மாடிப் படியில் தவறி விழுந்து அவரது தோள் பட்டை எலும்பு நழுவிவிட்டது.

முப்பதாவது வயதில் விமான விபத்தில் உயிர் பிழைத்தார். நாற்பத்தெட்டாவது வயதில் குடலில் அறுவை சிகிச்சை செய்து கட்டி அகற்றப்பட்டது.

ஒரு சமயம் இவர் காரில் பயணம் செய்தபோது விபத்து ஏற்பட்டு, கை எலும்பு முறிந்தது. ஒரு சமயம் இவர் வீட்டில் வழுக்கி விழுந்து, முதுகில் ஒரு எலும்பு முறிந்தது.

மறுபடியும் ஒரு சமயம் இவருக்கு கார் விபத்தில் கால் முறிந்தது.

இத்தனை விபத்துகளிலும் தப்பிதான் இங்கிலாந்து நாட்டின் சரித்திரத்தில் அதிசயங்கள் பல நிகழ்த்திக் காட்டினார் சர்ச்சில்.

-மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

இந்தியருக்கு வெறுந்தரையா...?

ஒருமுறை மைசூர் மகாராஜா, தன்

கொலுமண்டபத் தர்பாருக்கு வர அவருக்கு அழைப்பு விடுத்தார். அவரும் அந்த அழைப்பை ஏற்று, அங்கு சென்றார். ஆனால், அங்கு வெள்ளைக்கார அலுவலர்களுக்கு இருக்கையும், இந்திய அலுவலர்களுக்கு வெறுந்தரையும் ஒதுக்கப்பட்டன. இம்முறையை எதிர்த்து, மகாராஜாவின் அழைப்பை அவர் மறுதலித்தார்.

மறுப்புக் காரணத்தைக் கேட்டார் மகாராஜா. அவரும் உண்மைக் காரணத்தை ஒளிவு மறைவின்றி விளக்கி எழுதினார். அவர் மறுப்பில் அடங்கியுள்ள உண்மையை மதித்து வேறுபாடு இல்லாமல் விருந்தினர் அனைவருக்கும் இருக்கைகள் அமைக்க உத்தரவு பிறப்பித்தார் மகாராஜா.

• சர்ச்சில்



நாற்காலியின் மூலம், நாட்டின் மரியாதைக்குப் போராடி வெற்றி பெற்ற அந்தப் பெரியவர் விஸ்வேஸ்வரய்யா.

- டி.எஸ்.பாலு, சென்னை.

பண்டிதமணியின் சொல் நயம்...!

பண்டிதமணி மு. கதிரேசனாருக்கு ஓர் அன்பர் விருந்து வைத்தார். விருந்து முடிந்ததும் அவரிடம் பால் கொடுக்கப்பட்டது.

பால் டம்ளரைக் கையில் வாங்கிய பண்டிதமணி அதை உற்றுக் கவனித்தார். ''திருப்பாற்கடலில் சீனிவாசன் துயில் கொள்ளுகிறார்!'' என்றார். பாலில் எறும்பு ஒன்று மிதந்து கொண்டிருந்தது. சீனியில் எறும்பு வாசம் செய்யக்கூடியது என்பதால் 'சீனிவாசன்' என்று நயமாகச் சொன்னார் பண்டிதமணி.

- டி.எஸ்.பாலு, சென்னை.

• விஸ்வேஸ்வரய்யா




வாரியாரின் பேச்சுத் திறமை

கிருபானந்த வாரியார் ஒரு முறை கல்லூரி மாணவர்களிடையே பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது குறும்புக்கார மாணவன் ஒருவன், கிருபானந்த வாரியாரைக் கிண்டல் செய்யும் விதத்தில் அவரிடம், ''ஏன் நீங்கள் நெற்றியில், உடம்பில் எல்லாம் வெள்ளை அடித்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவர் நெற்றியில் விபூதி பூசியிருந்ததைப் பார்த்துக் கேட்டான். உடனே வாரியார் ''என் உள்ளம் ஆகிய வீட்டில் பகுத்தறிவு குடி கொண்டிருப்பதால்தான் என் உடல் முழுவதும் வெள்ளை அடித்திருக்கிறேன்'' என்றார். உடனே, அந்த மாணவன் அந்த இடத்தை விட்டு ஓடி விட்டான்.

- ஆகாஷ்வாணி, சென்னை

ஓவியப் போட்டி - முடிவுகள்



முதல் பரிசு
பி.வி. பானுமதி,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பொதட்டூர்பேட்டை.


ஜூன் இதழில் 'பெங்குவின்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.

இரண்டாம் பரிசு
ச. பாலாஜி,
பன்னிரண்டாம் வகுப்பு,
நகர மேல்நிலைப்பள்ளி,
கும்பகோணம்.






மூன்றாம் பரிசு
ஜி. சந்தோஷ்குமார்,
பத்தாம் வகுப்பு,
கேந்திர வித்யாலயா,
கல்பாக்கம்.



ஆறுதல் பரிசு
கே. பூபாலன்,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப்பள்ளி,
பொதட்டூர்பேட்டை.



ஆறுதல் பரிசு
ஹெச். பாலு,
பத்தாம் வகுப்பு,
போளூர்.



கோகுலம் க்விஸ் முடிவு

ஜூன் மாத க்விஸ் போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டு சரியான விடைகளையும் அளித்திருந்தனர். எனவே பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடைகள் :

1. சிவப்பு புள்ளி உள்ள கோள் வியாழன்.
2. பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர்.
3. ஹாலந்து நாட்டுக்கு இன்னொரு பெயர் நெதர்லாந்து.
4. வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டவர் பெரியார்.
5. துரியோதனனின் உடன் பிறந்த தம்பி துச்சாதனன்.
6. வெட்டுக் கிளியின் ரத்தம் வெள்ளை.
7. சமீபத்தில் இந்தியா அனுப்பிய விண்கலம் ஜி.எஸ்.எல்.வி.
8. ராஜஸ்தானில் உள்ள பாலைவனம் தார்.
9. ஜப்பானின் தலைநகர் டோக்கியோ.
10. சினாவின் துயரம் என்று அழைக்கப்டுவது மஞ்சள் நதி.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. சி.ச. ஹரீஷ், கொமாரபாளையம், கோவை.
2. எம்.ஐஸ்வர்யா, திருநெல்வேலி.
3. ஜி. நடராஜன், பத்தாம் வகுப்பு, வீனஸ் ஆங்கிலப் பள்ளி, சிதம்பரம்.
4. பி. உத்தராப்ரியதர்ஷினி, மான்பேடா, தானே (மேற்கு).
5. ஆர். விஜயலஷ்மி, இடப்பாடி, சேலம்.
6. மோனிட்டா சுதர்சன், நாகர் கோவில்.
7. எல். அஜிதா, சின்னத்திருப்பதி, சேலம்.
8. ஜெய. அரவிந்த்குமார், அணைக் கரை, தஞ்சாவூர்.
9. ஆர். நான்சி, மதுரை.
10. பா. சிவராம கிருஷ்ணன், பொன்மலை, திருச்சி.
11. சி. நிவேதிதா, திருச்செங்கோடு, நாமக்கல்.
12. டி. சுகுமார், திருப்பூர்.
13. ஜெ. மகேஸ்வரன், பத்தாம் வகுப்பு, ஜவஹர் உயர்நிலைப் பள்ளி, நெய்வேலி.
14. சி. சித்ரா, ஆவடி, சென்னை.
15. தே. சுந்தர், வில்லியனூர், பாண்டிச் சேரி.
16. எம். ராஜேஸ்வரி, வேப்பிலைப் பட்டி, சேலம்.
17. வைஷ்ணவி, நாகப்பட்டினம்.
18. ஜி. கனகராஜ், ஆரப்பாளையம், மதுரை.
19. சி. பாரதி, புளியந்தோப்பு, சென்னை
20. ப. செந்தில் சிவகணேஷ், கல் பாக்கம்.

பரிசு பெற்றவறர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

புதிர் உலக விடைகள்

II. சேவல் முட்டையிடாது .

III. முதல் டி-சர்ட் ரூ.750
இரண்டாவது டி-சர்ட் ரூ.800
மூன்றாவது டி-சர்ட் ரூ.200

IV.

	க		ஈ	
அ	ரை	யி	று	தி
ம்				ண்
மா	லை		பி	ணை

V. 10 நிமிடங்கள் (9வது நிமிடத்தில் அரைப் பகுதியும், 10வது நிமிடத்தில் முழுப் பகுதியும் நிரம்பிவிடும்)



தித்திப்பு...

✉ பாயசம் சிறுகதை தித்திப்பு, ஆடுகளை விலைக்கு வாங்கிய பூதம் வியப்பு, ஜோக்ஸ் கார்னர் சிரிப்பு, கார்ட்டூனிஸ்டாவது எப்படி? முனைப்பு, சக்திமான் போஸ்டர் பூரிப்பு, பாறையைத் தூக்க மறுத்த யானை கொந்தளிப்பு, சென்ற இதழ் கோகுலம் அருமையான படைப்பு!

— எம். செல்லையா, சாத்தூர்.

இனிய வான்

✉ ஜூலை கோகுலம் அட்டை ரொம்ப வித்தியாசமாகவும் பளிச்சென்றும் இருந்தது. 'இரவு வான் — அது இனிய வான்' இனிய கட்டுரையாகத் திகழ்ந்தது. என்னைப் போன்று நிறைய பேருக்கு இரவு வானைப் பார்க்கவும், கவனிக்கவும் உதவியாக இருக்கிறது.

— கே. சந்திரா,
பத்தாம் வகுப்பு,
அரசு பெண்கள்
உயர்நிலைப் பள்ளி,
செங்கல்பட்டு.

சந்தோஷம்

✉ மதன் அவர்களின் கார்ட்டூன்கள் மற்றும் அவரது எழுத்துகளை நான் படித்திருக்கிறேன். என்னைக் கவர்ந்தவர்களில் அவரும் ஒருவர். அவரின் பேட்டி நம் கோகுலத்தில் வந்ததைப் பார்த்ததும் எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை!

— வி. கார்த்திக் ராஜன்,
பன்னிரண்டாம் வகுப்பு, மேலூர்,
மதுரை.

சுவையானது

✉ அறிஞர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றும் சுவையாக இருந்தன. 'தோல்' பற்றிய உடல் பாதுகாப்பு பகுதி அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது.

— எஸ். காவ்யா,
மேட்டுப்பாளையம்.

கோகுலத்துக்கு 'ஜே'!

✉ தாடி தடுக்கி விழுந்த தாத்தா கதையும் படமும் சிரிப்பை வரவழைத்தன. சக்திமான் போஸ்டர் வழங்கிய கோகுலத்துக்கு 'ஜே'

— எம். மதிவாணன்,
சிவகங்கை.



கை அது

கண் தெரியாமல், காது கேட்காமல், நடக்க முடியாமல் கூட வாழ்ந்து விடலாம். ஆனால் இரண்டு கைகளும் இல்லாவிட்டால்...? கற்பனை செய்து பார்க்கும் போதே கஷ்டமாக இருக்கிறதல்லவா? கை ஒரு மிக அருமையான குட்டி இயந்திரம். திறமையான, அயராத உழைப்பாளி.

மனிதன் தவிர மற்ற விலங்குகளின் முன்னங் கால்கள் கைகளே. நடக்க, எதையும் பற்றி இழுக்க இந்தக் கைகள் உதவுகின்றன. மீனின் முன் பக்க துடுப்புகள் கூட அவற்றின் கைகள்தான்.



• உழைப்பாளர்களின் கைகள்


இதன் மூலம் நன்றாக மீன் நீந்த முடிகிறது. பறவைகளுக்கு கால்கள் மட்டும் தானே? அவற்றிற்கு இறக்கைகள் தான் கைகள். பறப்பதற்கும் பயன்படுகின்றன.

தவளையின் பாய்ச்சலுக்குக் காரணம் அவற்றின் கைகளே! கைகள் இல்லையென்றால் நம்மாலும் மற்ற பிராணிகளாலும் பூமியில் நிற்க முடியாது. காரணம் உடலைச் சமநிலைப் படுத்தி நிற்க வைப்பது இந்தக் கைகள்தான்.

ஒரு உறுப்பின் முக்கியத்துவம் அதற்காக மூளையில் எவ்வளவு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்ததே! மூளையின் கட்டளைப் பகுதியில் கைகளுக்கான இடம் நிறைய ஒதுக்கப்பட்டுள்ளது. நம் கட்டை விரலை அசைக்க வேண்டும் என்றால் கூட மூளையிலிருந்து செய்தி அனுப்பப்பட்டு நரம்புகளை மீட்டி, தசைகள் இணைப்புகளை நீட்டி அசைய வைக்கின்றன. தூங்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் அதிகம் வேலை செய்வது கைகள்தான்! நம் வாழ்நாளில் குறைந்தபட்சம் 2 கோடி முறையாவது விரல்களை நீட்டி மடக்குகிறோம்.

கரு வளர்ந்த நான்கு

• தும்பிக்கை தான் யானைக்குக் கை




மாதங்களிலேயே கைகள் முழு உருவத்தைப் பெற்று விடுகின்றன. குச்சி போல் சாதாரணமாகக் காட்சியளிக்கும் கைகளால் 4 அல்லது 5 கிலோ எடைகளைச் சுலபமாகத் தூக்க முடியும் என்றால் அவற்றின் வலிமையை எண்ணிப் பாருங்கள். இதுவே நல்ல பலசாலியாக இருந்தால் 60 கிலோ வரை தூக்கலாம். கர்ணம் மல்லேஸ்வரி என்றால் அதற்கு மேலும் தூக்கி ஒலிம்பிக்ஸில் பதக்கமும் வெல்லலாம்!

நம்மில் 92 சதவீதம் பேர் வலது கையையே முதன்மையாகப் பயன்படுத்துகிறோம். மீதி 8 சதவீதம் பேரே இடது கையைப் பயன்படுத்துகிறார்கள்.

* கை மூலம்தான் குரங்கு மரம் தாவுகிறது



* டாடா காட்டும் கை



நம்பிக்கை!

பூமியில் உள்ள உயிரினங்களில் மனிதனை மட்டும் உயர்ந்த அந்தஸ்துக்கு உயர்த்திப் பிடித்தது கைகளே! மனிதனை மனிதனாக்கியது கைவண்ணத்தால் கிடைத்த நாகரீகமே! மனித இனத்தில் கைகளின் செயல்பாடு பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கியமான மைல் கல்லாகும்.

மனிதன் நான்கு கால்களால் நடப்பதிலிருந்து விடுபட்டு, கருவிகளைப் பயன்படுத்தவும், செய்யவும் ஆரம்பித்த கால கட்டம்தான் அவனை மற்ற பிராணிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

உணவூட்டுவது, எழுதுவது, வீணை வாசிப்பது, படம் வரைவது மட்டும் கைகளின் பணிகள் அல்ல. கண் பார்வை இழந்தவர்களுக்குக் கையே கண்ணாகப் பயன்படுகிறது. காது கேட்காதவர்களுக்குக் கை சைகைகள் மூலம் செய்தி தெரிவிக்கப்படுகிறது.

கைகளின் தொடு உணர்வு மிகவும் அற்புதமானது. நாம் கண்களை மூடிக் கொண்டு கைகள் மூலம் ஒரு பொருள் பட்டா, பருத்தியா? மரமா, கல்லா? பென்சிலா, குச்சியா? என்பதை உணர்ந்து விடலாம்.

விரல் நுனியில் வெப்பத்தையும் குளிர்ச்சியையும் சுலபமாக உணர முடியும். ஏராளமான உணர்ச்சிச் செல்கள் நுனியில் உள்ளன. நாம் பயத்தில் கைகளைப் பிசைவது, கோபத்தில் கைகளை ஓங்குவது, உறவுக்குக் கைகொடுப்பது, எச்சரிக்கை செய்வது என அனைத்து உணர்ச்சிகளையும் கைகளே

காட்டி விடுகின்றன. கணிதத்தின் துவக்கம் கூட கைகளிலிருந்துதான் தோன்றியது.

மணிக்கட்டில் 8 எலும்புகளும், உள்ளங்கையில் 5 எலும்புகளும் விரல்களில் 14 எலும்புகளும் ஆக மொத்தம் 27 எலும்புகள் ஒரு கையில் உள்ளன. இரண்டு கைகளையும் சேர்த்தால் 54 எலும்புகள். நம் உடம்பில் உள்ள மொத்த எலும்புகளில் ¼ பகுதி கை எலும்புகள்.

கையில் கட்டை விரலின் பங்கு மகத்தானது. கட்டை விரல் இல்லை என்றால் எழுதவோ, சாப்பிடவோ, சைக்கிள் ஓட்டவோ, செல்லமாகத் தங்கையைக் கிள்ளவோ முடியாது. ஏன் எதுவுமே செய்ய முடியாது. கையின் வேலையில் 45 சதவீதம் வேலை கட்டை விரலாலேயே ஒழுங்குபடுத்தப்படுகிறது.

நம்மில் 92 சதவீதம் பேர் வலது கையையே முதன்மையாகப் பயன்படுத்துகிறோம். மீதி 8 சதவீதம் பேரே இடது கையைப் பயன்படுத்துகிறார்கள்.


ஒருவரின் கை ரேகை போல் உலகில் வேறு எவரது ரேகையும் இருக்காது. (காவல் துறையினர் குற்றவாளிகளைப் பிடிப்பது இதன் மூலம்தான்).

உள்ளங்கையில்தான் அதிக எண்ணிக்கையில் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. பயத்தில் நம் உள்ளங்கை நனைவது இதனால்தான். லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நம் முன்னோர்கள் மரம் விட்டு மரம் தாவும் போது உறுதியான பிடிப்பு ஏற்பட ஈரம் தேவையாக இருந்ததால் உள்ளங்கைகளில் அதிகமான வியர்வைச் சுரப்பிகள் இருந்தன. நம் உடலில் நிறமி இல்லாத பகுதி உள்ளங்கைகளும், உள்ளங்கால்களும்தான்.

பாதுகாப்பது எப்படி?

- கைகள் அதிக வேலைகளைச் செய்வதால் அடிக்கடி சுட்டுக் கொள்வது, நசுக்கிக் கொள்வது, வெட்டுப்படுவது என நிறைய ஆபத்துகள் ஏற்படுகின்றன. அவசியமான பணிகளைச் செய்யும் கைகளைக் கவனமாகக் கையாள வேண்டும்.
- தண்ணீரில் நீண்ட நேரம் கைகளை வைத்திருந்தாலும் ஆபத்துதான். நீர் மூலம் பாக்டீரியாக்கள், பூஞ்சைகள் தொற்றி விரலிலும் விரல் இடுக்கிலும் தோல் வியாதிகள் வரும். தொடர்ந்து தண்ணீரில் வேலை செய்வதைத் தவிர்த்து விடுங்கள்.
- நகங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் கிருமிகள் சாப்பிடும் போது உள்ளே சென்று விடும். அதே போல் சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் கைகளை நன்கு கழுவ வேண்டும். சுத்தமில்லாவிட்டால் நகச்சுத்தி வரும்.
- விரல் மூட்டுகளில் வலி வந்தால் உடனே மருத்துவரை நாடுங்கள். அது மூட்டுவாத நோயாகக் கூட இருக்கலாம். கான்சர் மட்டும் கைகளை அண்டுவதில்லை.
- கைகளை ஒரே நிலையில் நீண்ட நேரம் வைத்திருந்தால் ரத்த ஓட்டம் தடைப்பட வாய்ப்புண்டு.
- முன்பெல்லாம் கட்டை விரல் வெட்டுப்பட்டால் பெரிய இழப்பாகக் கருதப்பட்டது. இன்றைய மருத்துவத்தில் கட்டை விரல் வெட்டுப்பட்டால் ஆட்காட்டி விரலை அந்த இடத்தில் பொறுத்தி விடுகின்றனர். இது மிகவும் கஷ்டமான அறுவை சிகிச்சை.
- கை எலும்புகள் மற்றும் நரம்புகள் மிகவும் சிக்கலானவை. ஒரு கை வெட்டுப்பட்டால் மாற்றுக் கை பொறுத்துவது என்பது சில வருடங்கள் முன்பு வரை நடக்காத காரியமாக இருந்தது. சமீபத்தில் அமெரிக்காவில் ஒருவருக்கு மாற்றுக் கை பொருத்தி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர். சில ஆண்டுகள் கழித்தே இந்த அறுவை சிகிச்சை வெற்றியடைந்ததா, இல்லையா என்பதைக் கணிக்க முடியும்.

— மோகனா



OK பிறந்த கதை

நாம் பேசும்போது 'ஓ.கே' என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறோம். பொதுவாக 'ஆல் கரெக்ட்' என்ற வார்த்தை சுருங்கி நாளடைவில் 'ஓ.கே' என்று ஆகிவிட்டது என்று கூறுகிறார்கள். ஆனால், 'ஓ.கே' யைப் பற்றி இன்றுவரை பலரும் ஆராய்கிறார்கள். விடைதான் கிடைக்கவில்லை. அனைவரும் 'நன்றாக முடிந்தது', 'அப்படியே ஆகட்டும்' என்னும் அர்த்தங்களில் இதனைப் பயன் படுத்துகின்றனர். இதற்கிடையில் 'ஓ.கே வினுடைய பிறப்பைப் பற்றி பலர் கதை சொல்கிறார்கள்.

இத்தாலிய மொழியில் 'அப்படியே ஆகட்டும்' என்பதற்கு 'ஓங்லே – கேஸ்டர்' என்று சொல்வார்களாம். இதிலிருந்து 'ஓ.கே' தோன்றியிருக்கலாம் என்கிறார்கள்.

அமெரிக்காவில் பிறந்து அந்நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்த ஆண்ட்ரு – ஜாக்சன் எழுதப் படிக்கத் தெரியாதவர். 1826 ஆம் ஆண்டில் அவர் தேர்தலில் போட்டியிட்டபோது 'ஓ.கே' என்ற சொல்லைப் பயன்படுத்தினார். பிறகு அதுவே பிரபலமாகிவிட்டது என்கிறார்கள்.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த 'ஒட்டோ கிரேஸ்' (Otto Krause) என்பவர் அமெரிக்க கார் நிறுவனத்தில் வேலை பார்த்தார். 1950ஆம் ஆண்டில் அவர் வேலை பார்த்தபோது தரம் நிர்ணயிக்கும் பணியில் இருந்தார். அவர் ஒவ்வொரு காரையும் ஓட்டிப் பார்த்து அவரது இன்ஷியலை ஓ.கே. என்று எழுதுவார். கார் நன்றாக இருக்கிறது என்பதற்கு அடையாளமாக அவர் எழுதிய 'ஓ.கே' என்ற வார்த்தையே இப்போது பிரபலமாகி இருக்கிறது என்றும் கூறுகிறார்கள்.

— துரை கார்த்திக், மன்னார்குடி.

கோடை விடுமுறைப் போட்டி II முடிவு

கட்டங்களை நிரப்புங்கள்

நிறைய வாசகர்கள் பங்கு பெற்றாலும் பாதிக்கும்மேல் தவறான விடைகளைத் தந்திருந்தனர். சரியான விடைகளை எழுதியவர்களில் இருந்து பத்துப் பேர் குலுக்கலில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் முப்பது பரிசு பெறுவோர் :

1. ஆனந்த் குமார், முள்ளி கொளத்தூர்.
2. சு. விக்னேஷ், தூத்துக்குடி.
3. எஸ்.பி.ஆர். ஃபெபி பொன்வின், திருநெல்வேலி.
4. ஆர். ஏ. உத்தாரா, மதுரை.
5. எம். ஹர்ஷிணி, மருதாண்டா குறிச்சி, திருச்சி.
6. ப. செந்தில் சிவகணேஷ், கல்பாக்கம்.
7. எம். ஆறுமுகம், வையம்பட்டி, திருச்சி.
8. இ.பு. ஞானப் பிரகாஷ், மடிப்பாக்கம், சென்னை.
9. எஸ். சரவணன், உசிலம்பட்டி.
10. ஆர். மஞ்சுளா, கூடுவாஞ்சேரி.

சரியான விடை :

1. மலை
2. பூமாலை
3. செக்காலை
4. கடல் அலை
5. சிலந்தி வலை
6. நடிப்புக்கலை
7. கொத்துமல்லி இலை
8. மீன் பிடிக்கும் வலை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.



உங்களுடன் ஒரு நிமிடம்

பிரும்மா செய்த பலப்பரீட்சை!

"அவனுக்குக் கர்வம் தலைக்கேறிப் போச்சுடா!" – இந்தப் பேச்சு நாம் அடிக்கடி கேள்விப்படுகிற ஒன்றுதான். அதிலும் பள்ளி மாணவர்களிடம் சகஜமாக அடிபடும்.

பிரும்மாவுக்கு ஒரு சமயம் இப்படி கர்வம் ஏற்பட்டு விட்டது! கோகுலத்தில் கண்ணன் எல்லோராலும் போற்றப்படுவதைக் கண்டு அவனிடமே தன் சாமர்த்தியத்தைக் காட்ட நினைத்தார்!

ஆயர்பாடி சிறுவர்களுடன் கண்ணன் மாடு மேய்க்கப் போனான். யமுனா நதிக் கரையில் மாடுகளை மேய விட்டு விட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். இதுதான் சமயம் என்று பிரும்மா மாடுகளைக் கொண்டு போய் ஒரு குகையில் ஒளித்து வைத்து விட்டார்! விளையாட்டு முடிந்து பார்த்தால் மாடுகளைக் காணோம்!

கண்ணன், "நீங்கள் பகலுணவு சாப்பிடுங்கள். நான் மாடுகளைத் தேடி வருகிறேன்" என்று கூறிவிட்டு யமுனா நதிக்கரை ஓரமாகத் தேடிச் சென்றான். நீண்ட நேரம் தேடியும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பினான். இன்னொரு அதிர்ச்சி! இடையர் சிறுவர்களையும் காணோம்!

கண்ணன் யோசித்தான். இது பிரும்மாவின் வேலை என்று உணர்ந்தான். அடுத்த கணம் தன்னிலிருந்து மாடுகளையும் சிறுவர்களையும் அதே சாயலில் உருவாக்கினான்! சற்று நேரம் சென்று பிரும்மா, கண்ணன் தவிப்பதை வேடிக்கை பார்க்க வந்தார். கண்ணன் மாடு மேய்த்துக் கொண்டும் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டும் இருப்பதைப் பார்த்தார்! ஆச்சர்யம் தாங்காமல், தாம் மாடுகளையும் ஆயர்பாடி சிறுவர்களையும் ஒளித்து வைத்திருந்த குகைக்கு ஓடினார். அங்கேயும் அவரால் சிறை வைக்கப்பட்ட சிறுவர்களும் மாடுகளும் கண்ணுக்கு மெய்யாக இருப்பதைக் கண்டார்! தலைகுனிந்தார்.

"படைப்புத் தொழிலை எனக்கு அளித்த பகவானிடமே பலப்பரீட்சை செய்து பார்த்து அவமானப்பட்டேன்; என் கர்வம் அடங்கியது" என்று கூறியபடியே கண்ணன் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தார் பிரும்மா.

நான்கு வேதங்களையும் நமக்கு அளித்ததோடு, நமது தலைவிதியையும் நிர்ணயிக்கிற பிரும்மாவுக்கே இந்தக் கதி! கர்வம் என்பது அப்படி ஆளை மயக்கி விடுகிறது.

உங்கள் வகுப்பில் முதல் 'ரேங்க்' பெறும் மாணவன் எப்படி? மற்றவர்களுடன் எளிமையாகப் பழகுகிறானா? கர்வத்துடன் ஒதுங்கிப் போகிறானா? ஒருவேளை சகஜமாக இருக்க முயன்றும் பிறரால் ஒதுக்கப்படுகிறானா?

சில மாணவர்களுக்குக் கர்வம் இல்லாவிட்டாலும், சதா படிப்பு – பாடம் என்பதே சிந்தனையாக இருப்பதால் பிறருடன் பழகுதல் குறையும். இதைத் தப்பர்த்தம் செய்து கொள்ளக் கூடாது. ஒருவனை கர்வக்காரன் என்று முடிவு கட்டி ஒதுக்குவதற்கு முன் நன்கு யோசியுங்கள். பேசிப் பழக முயற்சி செய்தால்தான் ஒருவனுடைய உண்மையான சுபாவம் தெரியவரும். நிஜமாகவே ஒருவனுக்கு கர்வம் தலைக்கேறியிருப்பதாகத் தெரியவந்தால், இருக்கவே இருக்கிறது பிரும்மா கதை! அதை எடுத்து விடுங்கள்; திருந்தாமலா போய் விடுவான்!


– ஆசிரியர்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager ; Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

புள்ளிகளை இணைக்கவும்




எழுத்துகளைச் சரிசெய்து ஒரு நீதிவெண்பாவைக் கண்டுபிடியுங்கள்.



வரைந்து பழகுங்கள்!





விளையாடி மகிழுங்கள்!

தவறை சுட்டிக் காட்டுங்கள்! ▼





"காலனியிலே கடை வச்சிருக்கியாமே. என்ன கடை?"

"காலணிக் கடைதான்!"

- விமலா, உசிலம்பட்டி

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / Chief PMG-154 / 2001*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 50 * Registered as a Newspaper in Srilanka

